பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 சித்திரை 16 செவ்வாய்க்கிழமை (29-04-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:154

### ஆனையிறவு முகாம் தகர்ப்பு, 'தீச்சுவாலை' முறியடிப்பு

# வெற்றி விழா நிகழ்வுகள் கோலாகலம்!

# பளை நகர் நேற்று பெரு விழாக் கோலம்!!

## நினைவுக்கல் திரைநீக்கம்; நினைவிடத்தில் அஞ்சலி

யாழ்ப்பாணம்,ஏப்ரல்29

**ஆனையிறவு முகாம் தகர்ப்பு மற்றும் இராணுவம் மேற்கொண்ட 'தீச்சுவாலை' படை நடவடிக்கையை முறியடித்தமை ஆகிய வரலாற்று வெற்றி விழா பளை நகரில் நேற்று வெகு கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இதற்காக பளை நகர் நேற்று விழாக்கோலம் பூண்டிருந்தது. வீதிகள் மஞ்சள், சிவப்புநிறக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. மக்கள் திரண்டு வந்து நிகழ்வுகளில் பங்கேற்றனர். ஆனையிறவுச் சண்டையின்போது பளையில் இராணுவத்தினர் ஆட்லறித் தளமாகப் பயன்படுத்திய இடத்தில் நிர்மாணிக்கப்பட்ட சிறப்பு அரங்கில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.**

வெற்றி விழா நிகழ்வுகள் இரு அமர்வுகளாக இடம்பெற்றன.

காலை நிகழ்வுகள் 10.30 மணிககு ஆரம்பமாகின. பொதுச் சுடரை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம் ஏற்றிவைத்தார். தேசியக் கொடியை விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் பானுவும், படையணிகளின் கொடிகளை படையணிகளின் தளபதிகளும் மற்றும் சிறப்புத் தளபதிகளும் ஏற்றிவைத்தனர்.

பளையில் இராணுவத்தின் ஆட்லறித் தளத்தை கரும்புலிகள் தகர்த்த இடத்தில் அவர்கள் நினைவாக நிறுவப்பட்ட நினைவுக்கல்லை இத்தகர்ப்பின்போது வீரகாவியமான கரும்புலிகள் மேஜர் தனுசன், மேஜர் சுதாஜினி ஆகியோரின் தந்தையர்கள் திரைநீக்கம் செய்துவைத்து ஈகச்சுடரையும் ஏற்றிவைத்தனர்.

ஆனையிறவுச் சமரில் இறந்த அனைத்து மாவீரர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவிடத்திற்கு விடுதலைப் புலிகளின் தளபதிகள் மலர்மாலை சூட்டி அஞ்சலி செய்தனர். அதனையடுத்து மாவீரர்களின் நினைவாக அவர்களின் பெற்றோர் மரக்கன்றுகளை நாட்டினார்கள்.

மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம், விடுதலைப் புலிகளின் மூத்த தளபதியும் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளருமாகிய பொட்டு அம்மான் ஆகியோர் உரையாற்றினார்கள்.

விடுதலைப் புலிகளின் மகளிர்

(14ஆம் பக்கம் பார்க்க)



ஆனையிறவுத்தள வெற்றி மற்றும் தீச்சுவாலை இராணுவ நடவடிக்கையை முறியடித்தமை ஆகியவற்றின் வெற்றிநாள் நேற்று பளையில் கொண்டாடப்பட்டது. அதன்ஒரு பகுதியாக இந்த வெற்றிகளுக்குக் காரணமான கரும்புலிகளதும் மாவீரர்களதும் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபியும் நேற்று திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. அதனையே படத்தில் காண்கிறீர்கள். (மேலும் படங்களும் செய்தியும் 2,11ஆம் பக்கங்களில்)

### யாழ்ப்பாணத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்ட

# பிரபாவுக்கான வெற்றிக் கேடயம் கேணல் சூசையிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.29

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு வழங்குவதற்கென யாழ்ப்பாணத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்ட வெற்றிக்கேடயம் நேற்று மாலை பளையில் வைத்து கேணல் சூசையிடம் கையளிக்கப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் 12.40 மணியளவில் சுமார் மூன்றரை அடி உயரமான வெற்றிக்கேடயம் மினிவான் ஒன்றின் மேல் வைத்து யாழ்.செயலகப் பகுதிக்கு எடுத்துவரப்பட்டது. அங்கு கேடயம் வந்து சேர்ந்ததும் பொதுச் சுடர் ஏற்றப்பட்டது. பொதுச் சுடரினை விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி ஏற்றிவைத்தார். தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கமும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் ஏற்றிவைத்தனர்.

தேசியத் தலைவருக்கு வழங்கப்படவுள்ள வீரவிருதினை யாழ்.இளைஞர்களிடம் யாழ்.வர்த்தகர்கள் சம்பிரதாயபூர்வமாகக் கையளித்தனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.கோட்டைப் பகுதியில் புதிய படைமுகாம் மாநகரசபை வளாகத்துக்கு பதில் புதிய இடம்

## கட்டுமானப் பணிகளுக்கு இந்தியா கடனுதவி

யாழ்ப்பாணம்,ஏப்.29

யாழ்கோட்டை மற்றும் அதன் மேற்குப் பகுதி ஆகியவற்றை உள்ளடக்கி புதிய முகாம் ஒன்றை இராணுவம் அமைக்கவுள்ளது பாதுகாப்பு அமைச்சு இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது.

இந்த முகாம் அமைப்பதற்கான பொருள் உதவிகள் இந்தியாவின் கடன் திட்டத்தின் கீழ் பெறப்படவுள்ளன.

தற்போது நகரின் மத்தியில் - யாழ் போதனா வைத்தியசாலைக்குப் பின்புறமாக - சுபாஸ் மற்றும் ஞானம்ஸ் ஹோட்டல்களிலும் அவற்றைச் சுற்றியுள்ள வீடுகளிலும் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம் அங்கிருந்து அகற்றப்பட்டு கோட்டைப் பகுதியில் புதிதாக அமைக்கப்படவிருக்கும் முகாமுக்கு மாற்றப்படவுள்ளது.

கோட்டைப் பகுதியில் புதிய முகாம் அமைப்பதற்கான நில அளவை வேலைகள் அனைத்தும் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

சுபாஸ் மற்றும் ஞானம்ஸ் ஹோட்டல்களில் இருந்து இராணுவத்தினர் அகற்றப்படவேண்டும் என்று நீண்ட காலமாக குடாநாட்டு பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்து வந்திருந்தன.

இதனையடுத்து அந்த முகாமை நகரின் மத்தியில் - முன்னர் யாழ். மாநகரசபை அமைந்திருந்த இடத்தில் - அமைப்பதற்கு இராணுவம் ஒழுங்குகளை மேற்கொண்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)

# பாலசிங்கம் - மிலிந்த நேற்று தொலைபேசி மூலம் உரையாடல்

விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் நேற்றுமாலை தொலைபேசி மூலம் அமைச்சர் மிலிந்த மொறகொடவுடன் தொடர்புகொண்டார். புலிகளுக்கும் அமைச்சர் மொறகொடவுக்கும் இடையில் கசப்புணர்வை ஏற்படுத்தத்தக்க வகையில் வெளியான செய்திகள் குறித்து அவருடன் கலந்துரையாடினார். அந்தக் கசப்புணர்வுகளை நீக்கும் வகையில் நிலைமையைத் தெளிவுபடுத்தினார். - இத்தகவல்களை மதியுரைஞர் பாலசிங்கமே நேற்று வெளியிட்டார்.

புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் செவ்வி ஒன்று கடந்த ஞாயிறு ஆங்கில வார இதழ் ஒன்றில் வெளியாகியிருந்தது.

"வாஷிங்ரன் உதவி வழங்கும் மாநாட்டுக்குப் புலிகளின் பிரதிநிதிகளாக மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கதை அழைக்கச் செய்வேன். இல்லாவிட்டால் நான் அந்தக் கூட்டத்தில் பங்குபற்றமாட்டேன் என அமைச்சர் மொறகொட எமக்கு உறுதியளித்திருந்தார்" - இப்படி அந்தச் செவ்வியில் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறியிருந்தார் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இச் செவ்வி பிரசுரமானதை அடுத்து விசனமடைந்த அமைச்சர் மொறகொட ரொய்ட்டருக்குப் பேட்டியளித்தார்.

உண்மை நிலையைப் புலிகள் தெளிவுபடுத்தாவிட்டால் சமாதானப் பேச்சுக்களில் தான் இனிமேல் கலந்து கொள்ளமாட்டேன் என அமைச்சர் மொறகொட அதில் தெரிவித்திருந்தார்.

இந்தத் தகவல்கள் குறித்து மதியுரைஞர் பாலசிங்கத்தை நேற்றிரவு தொடர்புகொண்டு கேட்டபோது அவர்

(14ஆம் பக்கம் பார்க்க)

# பிரதமர் ரணிலின் பதில் கடிதம் இன்று பாலசிங்கத்துக்கு அனுப்பப்படும்

கொழும்பு,ஏப்.29

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் கடிதத்துக்குப் பிரதமரின் விரிவான பதில் கடிதம் தயாராகிவிட்டது. இறுதி நேரத்தில் இக்கடிதத்தில் சில மாற்றங்களைச் செய்யுமாறு பிரதமர் கூறியிருப்பதால் இன்று அக்கடிதம் அனுப்பிவைக்கப்படும் என பிரதமரின் அலுவலக வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களில் இணங்கப்பட்ட விடயங்கள் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படாததால் சமாதானப் பேச்சுக்களை இடைநிறுத்திக் கொள்வதாக பாலசிங்கம் கடந்த 21ஆம் திகதி பிரதமருக்குக் கடிதம் அனுப்பியிருந்தது தெரிந்ததே.

இக்கடிதத்துக்கு விரிவான பதில் அனுப்பப்படும் என்று பிரதமர் ரணில் மறுநாளே பாலசிங்கத்துக்கு சுருக்கமான கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அதன்படியே இப்பதில் கடிதம் அனுப்பப்படவிருக்கிறது.

இறுதி மாற்றங்களுடன், இன்று பிரதமரின் பதில் கடிதம் பாலசிங்கத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்று பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# நிரந்தரமான ஒரு தீர்வு எட்டப்படும் வரை கடற்புலிகள்தான் தமிழீழத்தின் கடற்படை

## வெற்றிவிழா நிகழ்வில் கேணல் சூசை உரை

பளை,ஏப்.29

தமிழீழ விடுதலைப் போராட்டம் தீர்க்கமானதும் நிரந்தரமானதுமான முடிவொன்றை எட்டும் வரையும் விடுதலைப் புலிகளின் பெரும் பலமான கடற்புலிகள் தமிழீழத்தின் கடற்படையாகவே இருப்பார்கள்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை. ஆனையிறவு வெற்றி நாள் மற்றும் 'தீச்சுவாலை' இராணுவ நடவடிக்கையின் முறியடிப்பு வெற்றி நாள் என்பவற்றையொட்டி நேற்று பளை நகரில் இடம்பெற்ற வெற்றிவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே கேணல் சூசை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

1991ஆம் ஆண்டு ஆனையிறவுத் தளத்தின் மீதான எமது தாக்குதலில் நாம் பின்வாங்க நேரிட்டதற்கு அப்போது எமது கடற்படைப் பலம் உறுதி அடைந்திருக்காமையே காரணம்.

வெற்றிலைக்கேணிப் பகுதியில் இலங்கைக் கடற்படையால் மேற்கொள்ளப்பட்ட கடற்படைத் தரையிறக்க நடவடிக்கையே 1991ஆம் ஆண்டு ஆனையிறவு மீதான எமது படை நடவடிக்கை கைவிடப்படக் காரணமாக அமைந்தது.

### குடாரப்பு தரையிறக்கம்

இதே ஆனையிறவினை மீண்டும் வெற்றிகொள்ளும் நோக்குடன் 2000 ஆம் ஆண்டு வெற்றிலைக்கேணியில் இருந்து குடாரப்புக்கு தரையிறக்கம் ஒன்றை மேற்கொண்ட வேளையில் இலங்கைக் கடற்படை தனது முழுப் பலத்தையும் பயன்படுத்தி தரையிறக்கத்தை தடுக்கும் முயற்சிகளில் இறங்கியது. எனினும், புலிகளின் பதில் தாக்குதலால் பெரும் அழிவுகளுடன் கடற்படை பின்வாங்கியது.

இது கடற்புலிகளின் குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்குச் சான்று பகரும் நிகழ்வாக அமைந்திருந்தது. ஆனையிறவுத்தள வெற்றிக்கு இத்தரையிறக்க நிகழ்வே வழிகோலியது.

இதேபோல் -

ஆனையிறவினை மீண்டும் கைப்பற்றும் நோக்குடன் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், பல நாடுகளிலும் இருந்து பெறப்பட்ட ஆயுத வளங்களையும் விமானப்படை வளங்களையும இராணுவ ரீதியிலான ஆலோசனைகளையும் துணைகொண்டு ஒரு பாரிய படை நடவடிக்கையை 'தீச்சுவாலை' என்ற பெயரில் ஸ்ரீலங்கா இராணுவம் மேற்கொண்டது.

அதனை மிகவும் அவதானமாகவும, வேகமாகவும் புலிகளின் தரைப் படைகள் முறியடித்தன.

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் கடலில் ஒரு தரையிறக்கத்தினை மேற்கொண்டு ஆனையிறவினைத் தக்க வைத்துக்கொண்ட எதிரியை ஒன்பது ஆண்டுகளின் பின்னர் கடலில் அதே பாணியில் ஒரு தரையிறக்கத்தினை மேற்கொண்டு - ஆனையிறவை வெற்றிகண்டோம். அப்போது கடலில் எப்படி நமது பலத்தினை காட்டினோமோ அதேபோன்றுதான் தரையிலும் எமது பலத்தினை ஒரு முகப்படுத்தி 'தீச்சுவாலை' முறியடிப்பு மூலம் இராணுவத்தின் பலம் என்னும் முதுகெலும்பினை உடைத்தெறிந்தோம்.

### தலைவரின் தீர்க்கதரிசனம்

இந்த வெற்றிகள் எமது தலைவரின் தீர்க்கதரிசனம் கொண்ட ஒரு பார்வையால் கிடைத்தவை. ஏனெனில், 1991ஆம் ஆண்டு ஆனையிறவுத் தளத்தை வீழ்த்தமுடியாதபோது அதற்கான காரணத்தினைக் கண்டறிந்து அன்று முதல் விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் என்ற ஓர் அணியை மறுசீரமைத்து, கடற்புலிகளாக - தமிழீழத்தின் பாரிய கடற்படையாக - விஸ்வரூபம் எடுக்கவைத்தவர் தலைவர்.

1991இல் ஆனையிறவைத் தக்க வைக்க இலங்கைக் கடற்படையினரைத் தரையிறக்கம் செய்த அதே பாணியை 9ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் பின்பற்றி பெரும் சாதனை படைக்கச் செய்தார் தலைவர். இது அவரது தீர்க்கதரிசனம் மிக்கதொரு செயலாகும்.

### கடற்புலிகளின் பலம்

இன்று பதினொரு ஆண்டுகள் கடந்து கடற்புலிகளாக வலம்வரும் புலிகளின் கடற்படையை தெற்கிலுள்ளவாகள் புலிகளின் கடற்படையாக அங்கீகரிக்க முன்வராதபோதும், இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக குழுவும், சர்வதேசமும் உண்மை நிலையை ஏற்றுள்ளன.

யாழ்ப்பாணத்திற்கான தரைவழிப் பாதை ஒன்றினைத் திறப்பதற்காக இலங்கைப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட ஜெயசிகுறு இராணுவ நடவடிக்கையை முறியடிப்பதற்கான பெரும் சமருக்காக கிழக்கிலிருந்து எமது 3ஆயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகள் கடல்மார்க்கமாகவே கொண்டுவரப்பட்டனர்.

யாழ்ப்பாணத்திற்கான விநியோகப் பாதையை கரையிலிருந்து கடலில் 20 கிலோமீற்றர் தூரத்தின் ஊடாகவே முன்னர் எல்லாம் இலங்கைக் கடற்படை மேற்கொண்டு வந்தது.

எனினும், கடற்புலிகளின் தொடர்ச்சியான தாக்குதலால் அச்சமடைந்த கடற்படையினர், திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறைக்குச் செல்லும் கடற்பயணப் பாதையை கரையிலிருந்து 100 கிலோமீற்றர் தூரத்துக்கு மாற்றி அமைத்ததும் கடற்புலிகள்தான்.

அதுமட்டுமன்றி, விமானப்படையின் உதவியுடன் பகலில் கடற் பயணத்தினை மேற்கொள்வதே தமக்குப் பாதுகாப்பு எனக்கருதி அந்த வழியைப் பின்பற்றியது கடற்படை. எனினும், அந்த உபாயத்தைக்கூட உடைத்தெறியும் நடவடிக்கையாக பட்டப்பகலில் கடற்படையை நாம் தாக்கினோம்.

இத்தகைய வீரம்பொருந்திய படையை உடையது கடற்புலிகளின் படையணி என்பது ஆட்சியில் இருப்பவர்களுக்கும், ஏற்கனவே ஆட்சியில் இருந்தவர்களுக்கும் தற்போது கடற்படைத் தளபதியாக இருக்கும் தயா சந்தகிரிக்கும் தெரியும். தெரிந்திருந்தும் தமிழீழக் கடற்பரப்பில் கடற்படையாக எமது கடற்புலிகள் அணியை அங்கீகரிக்க அவர்கள் மறுக்கின்றார்கள் என்பது விளங்கிக் கொள்ளமுடியாத ஒன்றாகவே உள்ளது.

### இயல்புநிலை திரும்பவில்லை

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு ஏழு சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளபோதிலும் மக்களின் இயல்பு வாழ்க்கை மீண்டும் திரும்புவதற்கு இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. நாங்களும் எத்தனையோ தடவைகள் வலியுறுத்திக் கூறியுள்ளபோதிலும் அதில் எந்த முன்னேற்றமும் இடம்பெறவில்லை.

கடலில் மீன்பிடிக்கும் மீனவர்கள் இன்றுவரை பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றார்கள். இந்திய ட்ரோலர்களால் ஏற்படும் பிரச்சினையை இதுவரை இலங்கைக் கடற்படையினர் தடுக்கவில்லை. விவசாயத்திலும் படையினர் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளார்கள். பயிர்ச்செய்கைக்கு ஏற்ற, மிகமுக்கிய பகுதியை உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் ஆக்கிரமித்து வைத்துள்ளார்கள்.

- இவ்வாறு வளங்கள் முடக்கப்படுவதைக் கண்டித்தும் அங்கிருந்து இராணுவத்தை வெளியேறக் கோரியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் பொது அமைப்புகளூடாக நீங்கள் பல மகஜர்களை அரசுக்கு அனுப்பிவைத்துள்ளீர்கள். அவற்றுக்கு இன்னமும் சரியான தீர்வு கிட்டியதா? இல்லையே!

### பொறுமை காத்தோம்

கடற்படையால் 11 கடற்புலிகள் அழிக்கப்பட்டார்கள். நெடுந்தீவுக் கடற்பரப்பில் மூன்று கடற்புலிகள் வஞ்சகமாகப் படுகொலை செய்யப்பட்டார்கள். இவற்றையெல்லாம் எமது மக்களின் நல்வாழ்விற்கு வழி பிறக்கும் என்ற நம்பிக்கையுடன் பொறுத்துக்கொண்டோம்.

இந்த யுத்தநிறுத்த காலத்தில் 14 கடற்புலிகள் இறந்துள்ளபோதிலும், அதனை நாம் எமது மக்களுக்காகப் பொறுத்து நடக்கின்றோம்.

இத்தகைய பிரச்சினைகள் இரு தரப்பினருக்கும் ஊடாகப் பேசித் தீர்க்கப்படுமா? அல்லது சர்வதேச மத்தியஸ்தத்திற்கூடாக நடந்துகொண்டிருக்கும் பேச்சுக்கு ஊடாக இந்தப் பிரச்சினை பேசித் தீர்க்கப்படுமா?

இந்தப் 14 மாதகாலத்திலும் நடந்தது என்ன? நடந்து கொண்டிருப்பது

(13.ஆம் பக்கம் பார்க்க)



பளையில் நேற்று நடந்த வெற்றி விழாவினை விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளின் ஒருவரான கேணல் பானு தேசியக் கொடியை ஏற்றி ஆரம்பித்து வைக்கிறார்.

ஆயர்கள், அருட்தந்தையர்கள், பொதுமக்கள் முன்னிலையில்

# முன்னாள் ஆயரின் உடல் பேராலயத்தில் நல்லடக்கம்

யாழ்ப்பாணம்,ஏப்.29

மறைந்த முன்னாள் ஆயர் அதிவண. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் உடல் யாழ்.மரியன்னை பேராலயத்தில் நடைபெற்ற இறுதி அஞ்சலி மற்றும் ஆராதனைகளின் பின்னர் நேற்றுமாலை 4 மணியளவில் பேராலயத்தினுள் நல்லடக்கம் செய்யப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை யாழ்.திருச்சிலுவை கன்னியர் வைத்தியசாலையில் காலமான முன்னாள் ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையின் உடல், யாழ்.ஆயர் இல்ல சிற்றாலயத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

நேற்றுக்காலை 10 மணியளவில் ஆயரின் உடல் மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு, பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

பெருந்திரளான பொதுமக்களும் குருக்கள், கன்னியர் மற்றும் படை அதிகாரிகள், அங்கிலிக்கன், தென்னிந்தியத் திருச்சபை போன்றவற்றின் அருட்தந்தையர்கள் ஆகியோர் முன்னாள் ஆயரின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

மாலை 4 மணியளவில் யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கும் நிகழ்வு ஆரம்பமாகியது.

பாப்பரசரின் பிரதிநிதி மேதகு தோமஸ் ஜே ஆண்டகை, கொழும்பு பேராயர் மேதகு ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை, கொழும்பு முன்னாள் பேராயர் மேதகு மார்க்கஸ் பெர்னாண்டோ, கண்டி ஆயர் மேதகு வியான்னி பெர்னாண்டோ ஆண்டகை திருமலை - மட்டு. ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, குருநாகல் ஆயர் மேதகு நேரிஸ் பரிஸ் ஆண்டகை, காலிஆயர் மேதகு எல்மோ பெரேரா ஆண்டகை, பதுளை ஆயர் மேதகு வின்சன் பெரேரா ஆண்டகை மன்னார் ஆயர் மேதகு ராயப்பு யோசப் ஆண்டகை, இரத்தினபுரி ஆயர் மேதகு கரஸ்ட் ஏ பெரேரா, ஆண்டகை, கொழும்பு ஆயர் மேதகு மேரியல் பீரிஸ் ஆண்டகை ஆகியோரும் கூட்டுத் திருப்பலி நிறைவேற்றினர்.

தொடர்ந்து இரங்கலுரைகள் இடம்பெற்றன. அகதிகள் மீள்குடியமர்வு மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா, முன்னாள துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மற்றும் கொழும்ப பேராயர், திருமலை - மட்டுநகர் ஆயர், யாழ்.ஆயர் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். பாப்பரசர், பிரதமர் மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஆகியோர் அனுப்பியிருந்த அனுதாபச் செய்திகளும் வாசிக்கப்பட்டன.

பின்னர் மாலை 6 மணியளவில் யாழ். பேராலயத்தினுள் ஆயர்களுக்கு என ஒதுக்கப்பட்ட கல்லறையில் முன்னாள் ஆயர் மேதகு வ.தியோகுப்பிள்ளை ஆண்டகையின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. (எ-30-180)



ஆயரின் இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன, அருட்சகோதரிகள், படை அதிகாரிகள் மற்றும் துணைவேந்தர் சு.மோகனதாஸ், முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோரை முதல் இரு படங்களிலும், யாழ். ஆயரின் தலைமையில் கூட்டுத்திருப்பலி நிறைவேற்றப்படுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

(படம்: வலி.கிழக்குச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ஏற்பாட்டிலான கூட்டத்தை ஈராக்கியத் தலைவர்கள் புறக்கணிப்பு!

## தற்காலிக ஆட்சி அமைப்பதில் பின்னடைவு

ஈராக்கில் தற்காலிக ஆட்சியை அமைக்க அமெரிக்க ஜெனரல் ஜொய் கார்னர் ஏற்பாடு செய்த சந்திப்பில் அந்நாட்டின் 200இற்கும் மேற்பட்ட அரசியல் மற்றும் மதத் தலைவர்கள் கலந்துகொண்டுள்ளனர். ஆயினும், முக்கிய தலைவர்கள் இதில் கலந்து கொள்ளவில்லை. இது அமெரிக்காவுக்கு ஒரு பின்னடைவே என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

சதாம் ஹுசைனின் ஆட்சி முடிவுக்கு வந்ததையடுத்து அங்கு தற்காலிக ஆட்சியை ஏற்படுத்த நஸீரியாவில் ஏற்பாடுசெய்யப்பட்ட முதல் கூட்டத்தில் அரசியல் மற்றும் மத அமைப்புக்களைச் சேர்ந்த 80 தலைவர்கள் மட்டுமே கலந்துகொண்டதால் அக்கூடம் தோல்வியில் முடிந்தது.

அதனைத் தொடர்ந்து பக்தாத்தில் உள்ள மாநாட்டு அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு சற்றுஏறக்குறைய 400 முக்கிய பிரதிநிதிகளுக்கு ஜொய் கார்னர் அழைப்பு விடுத்திருந்தார்.

ஆனால், அமெரிக்கா எதிர்பார்த்த முக்கிய அரசியல் மற்றும் மதப்பிரிவுகளின் தலைவர்கள் இந்தச் சந்திப்பிலும் கலந்துகொள்ளவில்லை. அமெரிக்கா ஏற்படுத்தவுள்ள தற்காலிக அரசில் தலைமை நிர்வாகியாக பொறுப்பேற்பார் என்று எதிர்பார்க்கப்படும் ஈராக்கின் தேசிய காங்கிரஸ் தலைவா அகமது சலாபியும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. அவருடைய பிரதிநிதியை மட்டுமே அனுப்பி வைத்துள்ளார்.

நஸரியா கூட்டத்தைப் புறக்கணித்த ஈராக்கின் பெரும்பான்மை ஷியா முஸ்லிம மக்களின் மத அமைப்பான இஸ்லாமியப் புரட்சி உயர் பேரவை தலைவரும் நேற்றைய சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை. ஆனால், இவ்வமைப்பின் சார்பாக அதன் பிரதிநிதிகள் கலந்துகொண்டுள்ளனர்.

கூட்டம் நடைபெறும் மாநாட்டு மையத்தைச் சுற்றி அமெரிக்கப்படைகளின் டாங்கிகளும், கவச வாகனங்களும், ஏராளமான ராணுவ வீரர்களும் நிறுத்தப்பட்டுள்ளனர். அமெரிக்க ராணுவத்தின் ஹெலிகொப்டர்களும் அப்பகுதியில் வட்டமிட்டு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளன.

இக்கூட்டத்திற்கு முன் செய்தியாளர்களிடம் பேசிய ஜெனரல் கார்னர், ஈராக்கில் சட்டம் - ஒழுங்கை நிலைப்படுத்துவதே தனது முதன்மையான பணியாக இருக்கும் என்று கூறினார். அதற்காக பக்தாத்தில் பாதுகாப்பு குறித்த முக்கிய கூட்டம் ஒன்றை கூட்டியுள்ளதாகவும் தெரிவித்தார். (ஒ)




ஈராக்கில் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்.

# அமெரிக்கப் படையினரின் வாகனம் மீது பக்தாத்தில் மர்ம நபர்கள் தாக்குதல்!

பக்தாத்தில் வாகனப் போக்குவரத்திற்கென நிறுத்தப்பட்டிருந்த அமெரிக்கபடையினரின் வாகனம் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் நான்கு அமெரிக்கப் படைவீரர்கள் காயமடைந்தனர். யார் தாக்கினர் என்பதை அமெரிக்கப்படையினரால் கண்டு பிடிக்க முடியவில்லை.

18 நாள்களுக்கு முன் அமெரிக்கப்படைகள் ஈராக்கை கைப்பற்றியதன் பின்னர் ஈராக்கியர்கள் அமெரிக்கப்படையினரின் பிரசன்னத்திற்கு எதிராகப் பல எதிர்ப்புகளை தெரிவித்திருக்கின்றனர்.

இதனால், துருப்பினரின் எண்ணிக்கையை குறைப்பது பற்றி அமெரிக்கா யோசிக்கத் தொடங்கியுள்ளது. அமெரிக்கர்கள் பணியை முடித்துவிட்டார்கள்; இனி அவர்கள் விரைந்து வெளியேறி விட வேண்டும். இஸ்லாமிய அரசு ஒன்றை அமைக்க வழிவிட்டு நிற்க வேண்டும். என்று முன்னர் சதாமினால் தடைசெய்யப்பட்டிருந்த ஈராக்கிய இஸ்லாமிய கட்சித்தலைவர் நூதன அல் - ஹயாலி தெரிவித்துள்ளார்.

1980 இல் ஆரம்பித்த காலத்திலிருந்தே இக் கட்சி தடைசெய்யப்பட்டு தலைமறைவாக செயற்பட்டு வந்தது. இப்பொழுது இதற்கென பக்தாத்தில் பிரபலமான கட்டடமொன்றில் அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. 'பல கட்சி ஆட்சிமுறையையே நாம் விரும்புகினறோம். அமைதியான முறைகளில் ஆட்சிக்கு வர விரும்புகின்றோம்' என்று ஹயாலி தெரிவித்தார். இக் கட்சி பல தீவிர மாற்றங்களை முன்வைத்து பிரசாரத்தில் இறங்கியுள்ளது.

(ஒ)

## ஆர்ஜென்ரீனாவில் அதிபர் தேர்தல்

ஆர்ஜென்ரீனா அதிபர் தேர்தலின் முதலாம் சுற்று முடிவடைந்துள்ளது. 1990ஆம் ஆண்டிலிருந்து இரு தடவைகள் ஜனாதிபதிப் பதவியிலிருந்த கார்லோஸ் மெனம் இதுவரை எண்ணப்பட்ட வாக்குகளில் 23.9 வீதத்தையும் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட அதேகட்சியைச் சேர்ந்த மாநில ஆளுநருள் ஒருவரான தெஸ்ரோ கோசனர் 21.8 வீதத்தையும் பெற்றுள்ளனர். ஞாயிறன்று நடந்த தேர்தலில் 25 மில்லியன் வாக்காளர்கள் வாக்களித்தனர்.

ஆர்ஜென்ரீனாவின் பொருளாதாரம் 2001 இல் அதல பாதாளத்திற்கு சென்றதன் பின்னர் இப்பொழுது மக்களுக்கு வாக்களிக்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அடுத்த சுற்று வாக்களிப்பு மே 18 ஆம் திகதி நடைபெறும். கொள்கைகளை விடவும் தனிப்பட்ட நபர்களின் ஆளுமைக்கே மக்கள் வாக்களித்து வருகின்றனர் என்று தேர்தல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இரண்டு வருடங்களிற்கு முன்னர் வீதிப் போராட்டங்கள் உச்சக் கட்டத்திலிருந்த போது, இரண்டு வாரங்களில் நான்கு ஜனாதிபதிகள் மாறி மாறிப் பதவிக்கு வந்தனர். இதில், இப்போது பதவியிலிருக்கும் இடைக்கால ஜனாதிபதி ஹெல்டே 18ஆம் திகதி வெற்றிபெறப்போகும் ஜனாதிபதியிடம் பதவியைக் கையளிப்பார்.

வர்த்தக சமூகத்தினரின் ஆதரவு பொதுவாக 72 வயது மெனமிற்கும், இப்போது பதவியிலிருக்கும் ஜனாதிபதியின் செல்வாக்கு கோசனருக்கும் இருப்பதாக நம்பப்படுகிறது.




ஆர்ஜென்ரீனாவில் இடம்பெறும் அதிபர் தேர்தலில் மெனமின் ஆதரவாளர் ஒருவர் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

## கப்பலை கடத்தியவர்களுக்கு மரணதண்டனை!

கியூபா,ஏப்.29

அமெரிக்காவுக்கு அண்மையில் உள்ள கியூபாவில் கப்பலைக் கடத்தியவர்களுக்கு மரணதண்டனை விதிககப்பட்டது.

கியூபாவில் இருந்து அமெரிக்காவுக்குச் சென்ற கப்பல் ஒன்றை 2002 ஆம் ஆண்டு கடத்த மூன்று பேர் முயற்சித்தனர். ஆனால், அவர்களது முயற்சி முறியடிக்கப்பட்டு வழக்குத் தொடரப்பட்டது. வழக்குத் தீர்பபில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அதன்படி கடந்த வாரம் அந்த மூவருக்கும் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

பாப்பரசர் உட்பட உலகின் முக்கிய பிரமுகர்கள் பலரும் மனிதஉரிமை ஆர்வலர்களும் தெரிவித்த கடும் ஆட்சேபனைகளின் மத்தியில் இந்த மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

கியூபாவில் இருந்து அகதிகளாக அமெரிக்காவுக்கு தஞ்சம்புகச் செல்லும் கியூபா நாட்டவர்கள் கப்பல்களை கடத்திச்செல்லும் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்வது வழக்கமாகும் இதனைத் தடுக்கவே இந்த மூவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அதேவேளை -

கியூபா ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோவின் ஆட்சிக்கு எதிராக சதித்திட்டம் [illegible] தன் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஒ)

# சதாமின் முக்கிய தளபதி கைது; முக்கிய ஆவணங்கள் சிக்கின!

பக்தாத்,ஏப்.29

ஈராக் மீது அமெரிக்கா நடத்திய போர் ஓய்ந்து 16 நாள்களுக்குமேல் ஆகிவிட்டது. சதாம் ஹுசைனின் ஆட்சி வீழ்த்தப்பட்டுவிட்டது. அவரது முக்கிய தலைவர்கள், உறவினர்கள், விஞ்ஞானிகள் ஆகியோரைத் தேடிக் கண்டுபிடிக்கும் வேட்டையில் அமெரிக்கப் படைகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. தேடப்படும் 55 பேர்களின் பட்டியலையும் அமெரிக்கா வெளியிட்டுள்ளது.

இந்தநிலையில், சதாம் ஹுசைனின் முக்கிய தளபதிகளில் ஒருவரான ஹுசைன் முகமது அமீன் அமெரிக்கப் படைகளிடம் சிக்கியுள்ளார். ஈராக் தேசியக் கண்காணிப்பு இயக்கத்தின் தலைவராகவும் இவர் இருந்தார். ஈராக்கில் ஐ.நா.ஆயுதக் குழுவினா சோதனையிட்டபோது, பேரழிவு ஆயுதங்கள் பற்றிய இரகசியங்களை மறைத்தவர் இவர்தான் என்று அமெரிக்கா கூறுகிறது.

அமெரிக்காவால் தேடப்படும் பட்டியலில் இவரும் இடம்பெற்றிருந்தார். அவரிடம் இருந்து பேரழிவு ஆயுதங்கள பதுக்கி வைத்திருக்கும் இடம் பற்றிய இரகசிய ஆவணங்களை அமெரிககப் படையினர் கைப்பற்றியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

இவரையும் சேர்த்து இதுவரை சதாமின் சகாக்களான 13 பேர் அமெரிக்கப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆனால், அமெரிக்கா முக்கியமாகத் தேடிவரும் பெண் விஞ்ஞானி அமாஸ் இன்னும் பிடிபடவில்லை.

# மின்னல் வேக ஏவுகணை அமெரிக்கா தயாரிக்கிறது

வாஷிங்ரன்,ஏப்.29

மின்னல் வேக ஏவுகணையைத் தயாரிக்கும் இரகசியத் திட்டத்தில் ஈடுபட்டு வருகிறது அமெரிக்கா. வெகு தொலைவில் உள்ள இலக்குகளைக குறிபிசகாமல் தாக்கக்கூடியவையாக இவை இருக்கும்.

இத்திட்டம் 1980ஆம் ஆண்டுகளிலேயே தொடங்கப்பட்டாலும் இப்போதுதான் இதில் முழுக்கவனம் செலுத்தப்படுகிறது.

எதிர்காலத்தில் சதாம் போன்றவர்கள் மீது தாக்குதல் நடத்தினால் அவர்கள் தப்பிக்கத் துளியும் வாய்ப்பே இருக்கக்கூடாது. அதற்காகவே இந்த ஏவுகணைகள் தயாரிக்கப்படுகின்றன என இத்திட்டத்தோடு தொடர்புடைய சில நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஈராக் போரில் சதாமை ஒழித்துக் கட்டும் நோக்கில் பக்தாத்தில் அவர் தங்கியிருந்த இடம் மீது மார்ச் 20 ஆம் திகதி குரூஸ் ஏவுகணைகளை வீசின கூட்டணிப் படைகள்.

இரண்டாம் கட்டமாக ஏப்ரல் 7 ஆம திகதி அவர் ஆலோசனை நடத்திக் கொண்டிருந்த கட்டடம் மீது பதுங்கு அரணைத் தகர்க்கும் குண்டுகள் வீசப்பட்டன. உளவுத் தகவல் கிடைத்த 38 நிமிடங்களுக்குள் தாக்குதல் நடந்தன.

இரு தாக்குதல்களிலும் அமெரிக்காவின் எண்ணம் ஈடேறவில்லை. சதாம் பலியாகாமல் தப்பிவிட்டார் என உறுதிசெய்யப்படாத தகவல்கள வெளியாகின.


இந்தப் படிப்பினையை வைத்து தற்போது மின்னல்வேக ஏவுகனைத் தயாரிப்பில் அமெரிக்கா முழு வீச்சில் இறங்கியிருக்கிறது.

(ஒ)

# உயிர்கொல்லி நோய் சார்ஸை கட்டுப்படுத்தியது வியட்நாம்!

## உலக சுகாதார அமைப்பு தெரிவிப்பு

உலகம் முழுவதும் 315 பேரின் உயிர்களைப் பலிகொண்டு 4,500இற்கும் அதிகமானோரைப் பாதித்தும் உள்ள சார்ஸ் உயிர்க்கொல்லி நோயை வியட்நாம் கட்டுப்படுத்திவிட்டதாக உலக சுகாதார அமைப்பு கூறியுள்ளது.



சீனா, ஹொங்கொங்கைத தொடர்ந்து வியட்நாமிலும் சார்ஸ் பரவியது. ஹொங்கொங்கிலிருந்து வியட்நாம் வந்த அமெரிக்க வர்த்தகர் ஒருவர் மூலம் சார்ஸ் நோய் அந்நாட்டில் வேகமாகப் பரவியது.

சார்ஸ் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்த 5 வியட்நாம் மருத்துவப் பணியாளர்கள் சார்ஸ தாக்கி உயிரிழந்தனர். ஆனால், சார்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் எவரும் உயிரிழக்கவில்லை. சார்ஸ் பாதித்த அனைவரையும் தனி மருத்துவமனையில் வைத்து சிகிச்சை அளித்ததன் மூலம் அதன் பரவலை வியட்நாம் முழுமையாகக் கட்டுப்படுத்திவிட்டது.

கடந்த ஒரு மாதமாகப் புதிதாக சார்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட எவரும் வியட்நாமில் இல்லை. இதுவரை பாதிக்கப்பட்டுள்ள 63 பேரும் ஹனோய் உட்பட பல்வேறு நகரங்களில் தனிப் பிரிவுகளில் வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர்.

சார்ஸின் பரவலைத் தாங்கள் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்திவிட்டாலும், வெளிநாட்டிலிருந்து வரும் பயணிகள் வாயிலாக மீண்டும் பரவாமல் இருக்கக் கடும் முன்னெச்சரிக்கை நடவடிககைகளை எடுத்து வருவதாக அந்நாட்டு சுகாதாரத்துறை அமைச்சர் ட்ரான் தீ ட்ரங் சீன் கூறியுள்ளார். சார்ஸ் நோயைக் கட்டுப்படுத்த முடியும் என்பதை வியட்நாம் வெற்றிகரமாக நிருபித்துவிட்டது என உலக சுகாதார அமைப்பின் வியட்நாம் பிரதிநிதி பாஸ்கல் ப்ருடன் கூறியுள்ளார்.

(ஒ)

# மூக்கும் மீசையும் இருந்தால் உங்களுக்கு 'சார்ஸ்' வராது

மீரட்,ஏப்.29

மூக்குமுடியும், மீசையும் உங்களுக்கு இருக்கிறதா? இருந்தால் உங்களுக்கு கவலையே இல்லை. உயிர்க்கொல்லி சார்ஸ் நோய் உங்களுக்கு வராது. இப்படிச் சொல்கிறார் உத்தரப் பிரதேச மாநில மீரட் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் ஏ.கார்க்.

இது குறித்து ஏ.கார்க் கூறியிருப்பதாவது:-

மூக்கின் உள்ளே இருக்கும் முடி மற்றும் மீசையை இப்போதைக்கு வெட்டி விடாதீர்கள். அவை நமது உடலில் கிருமிகள் பரவுவதைத் தடுக்கும. காற்றில் கலந்துவரும் கிருமிகளை இவை வடிகட்டுகின்றன.

பக்டீரியாக்கள், வைரஸ் போன்றவற்றை மூக்குமுடி உள்ளே செல்ல விடாது தடுத்து விடுகிறது. மீசையும் அப்படித்தான். இவை அனைத்தும் உடலில் இருக்கும் நோய்த்தடுப்பு அரணங்கள் ஆகும்.

இதனால், இவற்றைத் [illegible] இரண்டு அல்லது மூன்று தடை[illegible]கள் [illegible] செய்யுங்கள் இல்லையேல், அது [illegible] பாதிப்பாகலாம். சார்ஸ் [illegible] இருந்து [illegible] பருந்தித்துணி [illegible] வரைதான் [illegible].

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

(ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதோ!

இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியை பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத் தளாசசி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்குப் பாவியுங்கள்!

✻ 100% இளமையையும் வலிமையையும் தரும்!

சித்தாரா முடக்கத்தான் அழுக்கரா சிரப்

MANUFACTURED BY:
SITHARA PRODUCTS,
PUTTALAM ROAD,
(REG. NO: 6382) AR/PR/NO 228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா,
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P: 222 2567

(C-27204)

# சமூக விரோதிகளை இனங்காட்டினால் பிரச்சினைகள் தீர வாய்ப்பேற்படும்!

## கல்விக்கழகப் பிரமுகர் தெரிவிப்பு

குடாநாட்டு மக்கள் சமூகவிரோதி களை இனங்காட்டித் தருவதன்மூலம தமது பிரதேசங்களில் ஏற்படும் பல்வேறு பிரசசினைகளைத் தவிர்த்துக்கொள்ள முடியும்.

- இவ்வாறு விடுதலைப் புலிகளின் கல்விக்கழகப் பிரமுகர் அருண் மாஸ ரர் தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம்பற்றி விளக்கம் அளித்து கடந்த வியாழக் கிழமை கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயத்தில் இவர் உரை நிகழ்த தினார். அவர் தமதுரையில் மேலும் தெரி வித்ததாவது:-

விடுதலைப் புலிகளின் செயற்பாடு கள் பற்றி விஷமத்தனமான பிரசாரங் களை மேற்கொண்டு மக்கள் மத்தியில குளப்பம் விளைவிக்கும் செயல்களில் சில குழுக்கள் ஈடுபட்டு வருகின்றன.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் கட டுப்பாடின்றி மணல் அகழ்ந்தால் அப் பகுதி ஒரு குறுகிய 'கடல்நீரேரிபோல ஆகிவிடும். எனவே, திட்டமிட்டரீதியி லேயே மேற்படி மணல் அகழ்வை மேற்கொள்ளவேண்டும்.

மேலும் எமது மக்களின் அவசியத தேவைகள் இருக்கின்றபோதிலும் எதி கால வளநிலையைப் பேணும் முகமா கவே கட்டுப்பாடாக மணல் அகழ்வினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்

இன்று குடத்தனை, நாகர்கோவில் பகுதிகளில் பல ஆயிரம் லோட் மணல அகழ வசதியிருந்தும் அங்கு செல்ல முடியாத நிலையும் ஏற்றமுடியாத நிலை யும் காணப்படுகின்றன. பரவலாக மணல் அகழ்ந்தால் பாதிப்புக் குறைவாகவே ஏற படும். கட்டுப்பாடின்றி மணல அகழப்படு வது கச்சாயில் அவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை பத்திரிகை வாயிலாக அறிந்திருப்பீர்கள்.

வெட்டப்படும் ஒவ்வொரு பனை, தென்னை மரங்களிற்கும் நூறு ரூபா அறவிடப்படுவது மீள ஒரு மரத்தினை நடுகைசெய்து பராமரிப்பதற்கே ஆகும். அந்த நடவடிக்கையையும் பனை, தென்னை வள அபிவிருத்திச் சபையே மேற்கொள்கிறது.

இவ்வாறு எமது பிரதேசத்தின் வளத்தை திட்டமிட்டுக் காப்பாற்றாவிட் டால எதிர்காலத்தில் குடாநாட்டில் பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண டும்.

எனவே, எமது நாட்டை நல்லவகை யில் கட்டியெழுப்ப இவ்வாறான நடை முறைகளை ஏற்று கடைப்பிடிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (ஒ-72)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



274, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## திருமதி
## கமலாம்பிகை ஆறுமுகம்தம்பி

(இளைப்பாறிய ஆசிரியை)

தோற்றம் 23-05-1921

மறைவு 09-05-2002

திதி: 29.04.2003

ஓராண்டு ஆனதுவோ - உங்கள்
நிழலில் வளர்ந்த காலம் மறப்பதுவோ
மறந்தால் அன்று எமது இதயம்
துடிக்க மறக்கட்டும் - அதுவே
நாம் பெற்ற வரமாகட்டும்
உங்கள் ஆத்மா கயிலை நாதன் பாதம்
சேர பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
ராகுலன் (அம்பி),
ராகினி கங்காதரன்.

(17323)


# சுடர் ஒளி 04.05.2003 இதழில்

விலை 14/=




- பேச்சில் ஏற்பட்ட தடங்கல் அரசுக்கு கால அவகாசம்
- வரன்முறை தாண்டிய நிலையில் வன்முறைச் செயலில் இளைஞர்கள்
- அதிகாரத் தலைமைத்துவ வெற்றிடத்தால் ஆபத்தான போக்கில் சிக்கும் குடாநாடு - வடபுலம்.
- அரங்கேறும் இனவிரோத செயல்களும் மனங்கோணும் மக்களின் மனநிலைகளும் - தேரடி.
- மூதூரில் முடிவுக்கு வந்த முறுகல் நிலை.

மற்றும் ஈராக் தொடர்,
மதன் சித்திரத் தொடர் கதை, மசாலாமிக்ஸ்,
சினிமா, பித்தன் பதில்கள், மருத்துவம்,
விளையாட்டு, கலையமுதம், சிறுவர் உட்பட
பல்வேறு அம்சங்கள்.

(C/27586)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# நீதிபதி ஸ்தானத்தில் வழக்காளியை அமர்த்துவதா?

கண்காணிப்புக் குழுவில் - குறிப்பாகக் கடற் கண்காணிப்பில் - இந்தியப் பிரதிநிதிகளும் உள்ளடக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை பிரதான எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து முன்வைத்திருக்கின்றன.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டிருக்கும் ரெலோ முதல்வர் என்.ஸ்ரீகாந்தா இரண்டு விடயங்களைச் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

கண்காணிப்புக் குழுவில் இந்தியா பங்குபற்ற வேண்டும் என்ற கோரிக்கையை இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டுமானால் அது முதலில் தனது நாட்டில் புலிகள் மீது விதித்திருக்கும் தடையை நீக்கவேண்டும். கடற் கண்காணிப்புப் பணியில் இந்தியப் பிரதிநிதிகளையும் இணைக்கக் கோரும் இலங்கையின் பிரதான எதிர்க் கட்சிகள், அதற்கு வசதி செய்யும் விதத்தில் புலிகள் மீதான தடையை நீக்கும்படியும் இந்தியாவைக் கோர வேண்டும் - இது முதல் விடயம்.

இலங்கை எதிர்க்கட்சிகளின் மேற்படி கோரிக்கை போன்ற முக்கிய நகர்வுகள் இந்திய அதிகார வர்க்கத்தின் ஒரு பகுதியினரின் ஆசீர்வாதத்துடனேயே முன்னெடுக்கப்படுகின்றன - இது மற்ற விடயம்.

புலிகளை ஓர் இயக்கமாக - இலங்கைத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக - ஏற்றுக்கொள்ள இந்தியா தயாரில்லை. அதற்கு சட்டபூர்வ அந்தஸ்து அளிக்கக் கூட இந்தியா விரும்பவில்லை. புலிகளை இந்தியா சட்டரீதியாகத் தடை செய்துள்ளது.

இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குத் தமிழர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்குரிய நிதி மற்றும் உதவிகளைத் திரட்டும் நோக்கில் நடைபெறும் சர்வதேச உதவுநர் கூட்டங்களில் புலிகளின் பிரதிநிதிகள் பங்குபற்றுவதால் அந்தக் கூட்டங்களை இந்தியா பகிஷ்கரிக்கின்றது.

தமிழகத்திலிருக்கும் ஈழத் தமிழ் அகதிகள் தமது தாயகம் திரும்ப விரும்புகின்றார்கள். அவர்களில் பெரும்பாலானோரின் தாயகப் பிரதேசம் புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதாலும், தமிழர்களின் அதிகார பூர்வப் பிரதிநிதிகள் என்ற வகையில் இடம்பெயர்ந்த அகதிகளின் மீள்குடியமர்வு புனர்வாழ்வளிப்பு போன்ற விடயங்களைப புலிகளே கையாள்வதாலும், இந்தியாவிலிருந்து நாடு திரும்ப விரும்பும் அகதிகளின் மீள்குடியேற்ற விவகாரத்தைக் கவனிப்பதில் புலிகளுக்கு முக்கிய பொறுப்பும், பங்களிப்பும் உள்ளது.

ஆனால், இதில் புலிகள் சம்பந்தப்படுவதால், அகதிகள் தமது தாயகம் திரும்பும் விடயங்கள் தொடர்பான கூட்டங்களை - புலிகள் பங்குபற்றுவதால் - இந்தியத் தரப்பு பகிஷ்கரிக்கின்றது. இதனால் அகதிகள் திரிசங்குசொர்க்கத்தில் அந்தரிப்பது வேறு விடயம்.

இவற்றுக்கு அப்பால் ஆழ்கடலில், விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல் நகர்வுகள் பற்றிக்கூட இலங்கைக் கடற்படைக்கு நேரத்துடன் தகவல் கொடுத்து, இலங்கைக் கடற்படை - புலிகளின் கடற்பிரிவு மோதலுக்கு அடிக்கடி பிள்ளையார் சுழி போடும் 'பெருமையும்' இந்தியாவுக்கு இருப்பதாக பல வட்டாரங்களில் அவ்வப்போது சந்தேகம் கிளப்பப்படுவது உண்டு.

இதற்கும் மேல், புலிகளுக்கு - இலங்கைத் தமிழர்களுக்கு - அவர்களின் இருப்புக்கான போராட்டத்தின் நியாயங்களுக்கு - தார்மீக ரீதியில் ஆதரவு வழங்கும் இந்தியர்களுக்கு எதிராகக்கூட "பொடா" சட்டத்தை ஏவிவிட்டு, புலிகளை முழு எதிரிகளாகப் பார்க்கும் கீர்த்தியும் இந்தியாவுக்கு உண்டு.

புலிகளுக்கு எதிரான தடையை இந்தியா இன்னும் நீக்கவில்லை; இலங்கை இனப்பிரச்சினையில் புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் மத்தியஸ்தராக - கண்காணிப்பாளராக - செயற்படக்கூடிய நடுநிலைப் போக்கில் தான் இருப்பதை இந்தியா இன்னும் தெளிவாக வெளிப்படுத்தவில்லை.

இந்த நிலையில், கண்காணிப்பாளராகச் செயற்பட இந்தியாவை அழைப்பது, வழக்காளியை நீதிபதி ஸ்தானத்தில் அமர்த்தும் கேலிக்குரிய நடவடிக்கை போன்றதாகும்.

இந்தியாவுக்கும் புலிகளுக்கும் இடையில் முரண்பாடற்ற நிலைமை பேணப்படுவது, தற்போதைய சமாதான முயற்சிகளின் ஊடான தமிழரின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் தீர்வுத்திட்டம் ஒன்று உருவாவதை மேலும் உறுதிப்படுத்தும் என்பது வாஸ்தவம் தான்.

அதற்காக கண்காணிப்புக் குழுவில் இந்தியா இடம்பெறுவதை புலிகள் கூட சகிப்புத்தன்மையோடு பொறுத்துக்கொள்ள முன்வரலாம்.

ஆனால், இலங்கைத் தமிழர் விடயத்தில் - அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளான புலிகளின் விடயத்தில் - இந்தியா கண்காணிப்பாளர்களாகச் செயற்படுவதாயின் அதற்கு முன்னர் தனது நடுநிலைத் தன்மையை தனது செயற்பாடுகள் மூலம் அது நிரூபிக்க வேண்டும்.

அப்படி இல்லாமல் இது விடயத்தில் பங்களிக்க இந்தியா முயலுமானால் உலகம் அதைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்கும்.

பெப்ரவரி உலர் உணவு நிவாரணம்:

## அரச களஞ்சியத்தில் சீனி பெற முடியவில்லை என்கிறது கூ.சங்கம்

பெப்ரவரி மாத உலர் உணவு நிவாரணத்துக்கு வழங்க வேண்டிய சீனியை நாவற்குழியில் உள்ள அரச களஞ்சியத்திலிருந்து உரிய நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்று பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தெரிவித்துள்ளது.

தமது சங்கத்துக்கு ஒதுக்கப்பட்ட சீனியைப் பெற்றுக் கொள்வதற்காக கடந்த 23.04.2003 அன்று நாவற்குழி கஞ்சியத்துக்குச் சென்ற சமயம் அங்கு கடமையில் இருந்த களஞ்சியப் பொறுப்பாளர் சீனியிருப்பில் இல்லை எனத் தெரிவித்ததுடன், கப்பலால் இறக்கப்பட்டதும் தருவதாகக் கூறினார் என்றும -பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ந.சிவஞானசுந்தரம் செய்திக் குறிப்பொன்றில் தெரிவித்துள்ளார்.

பெப்ரவரி மாதத்துக்கான உலர் உணவு நிவாரணத்தை சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் விநியோகிக்குமாறு யாழ். செயலகம் அறிவித்தல் விடுத்திருந்தது என்றும் -

ஆனால், சில கூட்டுறவுச் சங்கங்கள் இதுவரை நிவாரணப் பொருள்களைக் களஞ்சியத்திலிருந்து பெற்றுக்கொள்ளவில்லை என்றும் - யாழ்செயலக வட்டாரங்கள் தெரிவிததிருந்தன. இதனையடுத்தே பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இத்தகவலைச் சுட்டிக்காட்டியிருக்கிறது. (ஐ)

## நாட்டு நடப்பு

### யார்தான் வாழ்த்தப் போகிறார்?

ஊரெல்லாம் வீதி யெல்லாம்
உள்ளூறை கிராமம் எல்லாம்
சீரெலாம் ஒன்று சேர
சிறப்புற பந்தல் நட்டு
ஆறாத காதல் மேவ
அலையென மக்கள் கூடி
பாரெலாம் புகழ்ந்து போற்றும்
பைந்தமிழ் சிவபூமிதன்னில்
சீரான சைவப் பண்பை
சிறப்புற எடுத்துக் காட்டில்
பாரோங்கு சைவப் பண்பிங்கு
பல காலம் நிலைக்குமன்றோ
ஆரய்யா கொழும்பு சென்று
அம்பலத்தரங்கு ஏறி
வாராது போல் வந்த வாய்ப்பை
வீழ்த்தியே மகிழப் போகிறார்?

- விகடகவி.

கொழும்புத்துறையில் நள்ளிரவு

## வீடுபுகுந்த சிப்பாய் குறித்து கண்காணிப்புக்குழுவிடம் புகார்

யாழ்ப்பாணம்,ஏப்.29

நள்ளிரவு நேரம் திருட்டுத்தனமாக வீடொன்றினுள் சிப்பாய் ஒருவர் நுழைய முற்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் குறித்து போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினிடம் நேற்றுமுன்தினம் முறையிடப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை வளன்புரம் பகுதிவாசி ஒருவரே இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

கடந்த கால யுத்த அனர்த்தம் காரணமாக இடம்பெயர்ந்த இவர், தனது குடும்பத்தினருடன் மீண்டும் வளன்புரத்தில் தற்காலிக இருப்பிடத்தை அமைத்து மீளக்குடியமர்ந்துள்ளார்.

கடந்த புதன்கிழமை நள்ளிரவு இவரது வீட்டுக்குள் ஒருவர் திருட்டுத்தனமாக நுழைய முற்பட்டதாகவும் -

ஆள் அரவம் கேட்டு வீட்டில் உள்ளோர் விழித்துக்கொண்டதோடு, வீட்டினுள் நுழைய முயன்றவரையும் பிடித்து விட்டதாகவும் -

ஆயினும், நுழைய முயன்றவர் தனது பொருள்களைக் கைவிட்டு தப்பியோடி விட்டதாகவும் -

அந்த நபர் விட்டுச் சென்றவற்றில், இராணுவச் சீருடை, டோச்லைற், கைக்குறிப்பேடு ஆகியவை இருந்ததால், ஓடித் தப்பியவர் சிப்பாய் ஒருவரே என்று இனங்காணப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் உள்ள இராணுவ முகாமில் முறையிட்டதாகவும் -

குறிப்பிட்ட சிப்பாய் தாக்குதலுக்குள்ளாகி மயக்கமடைந்த நிலையில் மீட்கப்பட்டு இராணுவ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக அங்கு கூறப்பட்டதாகவும் - அறிய வருகிறது.

இந்நிலையிலேயே போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் இச்சம்பவம் தொடர்பாக முறையிடப்பட்டுள்ளது. (ஒ-12)

இலவச சேவையை சுயவிளம்பரமாக்க முயற்சி:

## புனர்வாழ்வு அமைச்சர் மீது 'புலிகளின் குரல்' குற்றச்சாட்டு!

வவுனியா,ஏப்.29

பொதுநல அமைப்பு வன்னிப் பகுதியில் நடத்திய இலவச கண்சிகிச்சை முகாமை தனது சுயவிளம்பரத்துக்குப் பயன்படுத்த புனர்வாழ்வு, மீள்குடியமர்வுக்கான அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன முயற்சித்தார்.

- இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளது 'புலிகளின் குரல்' வானொலி.

இது தொடர்பாக 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்ததாவது:-

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் அலுவலகத்தைக் கொண்டுள்ள 'யூனியன் சம்பஸ்' என்ற பொதுநல அமைப்பு கிளிநொச்சியில் பொதுமக்களுக்கான இலவச கண்சிகிச்சை முகாமொன்றை மேற்கொள்ளவும், மூக்குக் கண்ணாடிகளை இலவசமாக வழங்கவும் திட்டமிட்டது. இந்த விவகாரத்தினுள் தன்னை நுழைத்த அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன இந்தச் சேவையினை தனக்கு சுயவிளம்பரமாக்க முனைந்துள்ளார்.

குறிப்பிட்ட சமூக சேவை நிறுவனத்தினர் சிகிச்சை முகாமை நடத்தத் திட்டமிட்ட அதே தினத்தில் வன்னி வந்த அமைச்சர், சிகிச்சை முகாமை தானே ஆரம்பித்து வைத்து இலவச மூக்குக் கண்ணாடிகளையும் வழங்க பிராயத்தனம் செய்துள்ளார்.

ஆனால், சமூகசேவை அமைப்பினர் இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வை மறுநாள் நடத்தத் தீர்மானித்ததால் அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன கொழும்பு திரும்ப நேரிட்டது.

இதற்கு முன்னர் அமைச்சரால் வன்னியில் நடத்தப்பட்ட சிகிச்சை முகாமில் கண் பரிசோதனைக்கு 50ரூபாவும் மூக்குக் கண்ணாடிக்கு ஒருதொகைப் பணமும் அறவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

- இவ்வாறு 'புலிகளின் குரல்' வானொலியில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-12)

## மின் கம்பமாகப் பயன்படுத்த பனை மரமா? தேக்குமரமா?

இப்படி ஓர் இழுபறி நெடுந்தீவில்

யாழ்ப்பாணம்,ஏப்.29

நெடுந்தீவில் மின் விநியோகக் கம்பங்களாக தேக்கு மரமா? பனை மரமா? பயன்படுத்தப்படவேண்டும் என்பதில் இழுபறி நிலை தோன்றியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனால் ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மின் வெளிச்சமின்றி சிரமப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்த இழுபறி நிலைமை குறித்து நெடுந்தீவு புனித பரியோவான் ஆலயப பங்குத்தந்தை எஸ்.செபநேசரட்ணம் அடிகளார் மின்சக்தி, மின் விநியோக அமைச்சர் கரு ஜெயசூரியவிற்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

நெடுந்தீவு மக்களின் இரண்டுங்கெட்டான் நிலைமை குறித்து தனது விசனத்தையும் பங்குத்தந்தை அக்கடிதத்தில் வெளிப்படுத்தியுள்ளார்.

நெடுந்தீவு பிரதேச சபை மின்விநியோக கம்பங்களாக பனை மரத்தை பாவிக்கலாம் எனத் தீமானித்திருந்தது. ஆனால், தற்போதைய புதிய நிர்வாகமோ, தேக்குமரத்தையே மின்விநியோகக் கம்பங்களாகப் பயன்படுத்துவது சிறந்தது எனக் கூறுகின்றது.

இந்தக் குழப்பகரமான விவகாரத்தில் தங்களின் விசேட கவனத்தை எதிர்பார்க்கிறேன் - இவ்வாறு பங்குத் தந்தை தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (எ-9)

**நாளை**

சித்திரை 17
புதன்கிழமை
30.04.2003
திதி : சதுர்த்தசி
பிற்பகல் 04.16 வரை
நட்சத்திரம்:ரேவதி
முற்பகல் 8.40 வரை
[illegible] 04.28 - 05.58
[illegible] 11.58 - 01.28
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

[illegible] தெரியாதவனுக்கு சந்தேகமே வராது.

## காரைநகரின் அபிவிருத்திக்கு 'நிகோட்' ரூ1 கோடி வழங்கும்

### உதவி அரச அதிபர் தகவல்

காரைநகர்,ஏப்.29

காரைநகரின் அபிவிருத்திக்கென 'நிகோட்' திட்டத்தினால் ஒரு கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக காரைநகர் உதவி அரசாங்க அதிபர் வே.சாம்பசிவம் தெரிவித்தார்.

அண்மையில் திருகோணமலையில் நடைபெற்ற மாகாண திட்ட இணைப்புக்குழுக் கூட்டத்தில் இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் - இந்த நிதியில் இருந்து 68 லட்சம் ரூபா செலவில் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் இரு மாடிக் கட்டடமும் - காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயத்தில் 22 லட்சம் ரூபா செலவில் கட்டடங்கள் புனரமைத்தலும் புதிய கட்டடங்கள் அமைத்தலும் -

10 லட்சம் ரூபா செலவில் காரைநகர் வலந்தலையில் மீன் சந்தை கட்டடமும் அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (எ-73)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.தென்மேற்கு பகுதிகளில் 'டெங்கு' ஒழிப்பு நடவடிக்கை

வலி.தெற்கு,ஏப்.29

வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 'டெங்கு' காய்ச்சல் ஒழிப்பு சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வது என பிரதேச செயலர் பிரிவினரும், சுகாதாரப் பகுதியினரும் தீர்மானித்துள்ளனர்.

இதுதொடர்பான கலந்துரையாடல அண்மையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

உதவிப் பிரதேச செயலர் எஸ். செல்வராசா தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் சனசமூக நிலையங்கள், இளைஞர் கழகங்கள், மாதர் சங்கங்களைச் சேர்ந்த பலரும் கலந்துகொண்டனர்.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தரால் இப்பிரதேச எல்லைக்குள் செயற்படுத்தப்படக்கூடிய 'டெங்கு' காய்ச்சல் ஒழிப்புத் திட்டங்கள் தொடர்பான கருத்துரைகள் வழங்கப்பட்டன.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக ஆனைக்கோட்டை, சுதுமலை, உயரப்புலம், நவாலி மற்றும் மாதகல், பண்டத்தரிப்பு போன்ற இடங்களில் உள்ள கிராம சேவையாளர் பிரிவுகளில் அவ்வப்பகுதிகளைச் சேர்ந்த இளைஞர் அமைப்புகள், மாதர் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் என்பவற்றின் ஒத்துழைப்புடன் 'டெங்கு' ஒழிப்புத் திட்டம் பற்றிக் கலந்துரையாடல் நடத்துவது எனவும்-

அதனைத் தொடர்ந்து சிரமதானப் பணிகளை மேற்கொள்வது எனவும்- இந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

(எ-152)

## அடுத்தபோக வெங்காயச் செய்கைக்கு விவசாயிகள் ஏற்பாடு

கோப்பாய் நீர்வேலிப் பகுதி விவசாயிகள் அடுத்த போகத்திற்கான வெங்காயச் செய்கைக்கான ஆயத்தங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இம்முறை அதிகளவு நிலப்பரப்பில் வெங்காயச்செய்கையை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் விவசாயிகள் தரப்பில் கூறப்பட்டது. (எ-72)

## நீர்வேலிப் பகுதி வாழைமரங்களில் குருத்தடைப்பு நோய்

கோப்பாய்,ஏப்.29

கோப்பாய், நீர்வேலி பகுதி வாழை மரங்களில் குருமன், குருத்தடைப்பு நோய் பரவலாக ஏற்பட்டு வருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது நிலவும் உயர் வெப்ப நிலை காரணமாகவே இந்தநோய் தீவிரமாக பரவுவதாகவும் விவசாயிகள் தரப்பில் கூறப்பட்டது.

(எ-72)

## கால்நடைகளை கட்டிவளர்க்குமாறு அறிவுறுத்து

கோப்பாய்,ஏப்.29


கோப்பாய் பிரதேசத்தில் கட்டாக்காலி கால்நடைகளை கட்டிவளர்க்குமாறு விவசாய சம்மேளனத்தினர் அறிவுறுத்தியுள்ளனர்.

கால்நடைகளின் தொல்லை குறித்த விவசாயிகளின் முறைப்பாட்டைத் தொடர்ந்து, கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் -

இவ்வாறு பிடித்துக் கட்டப்படும் கால்நடைகளுக்கு தண்டப்பணமாக 250 ரூபா அறவிடப்படும் என்றும் -

தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-72)


முதன் முறையாக
தொழிற்சாலையின்
5 வருட உத்தரவாதம்

License No : 50445
BS No : 5412:1996
License No : KM41240

Access Graphics

ஏக முகவர்கள்:
சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிறைவேட்) லிமிட்டட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 337286 (நேரடி), 324261-5, 337283-5
பெக்ஸ்: 446554

WATERTEC
முத்திரையை அவதானியுங்கள்

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## கார் சாரதி உடன் தேவை

முன் அனுபவமும் வாகன அனுமதிப் பத்திரமும் உடைய சாரதிகள் தேவை. சாரதி அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பித்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

* விண்ணப்பதாரிகள் கொழும்பு பற்றிய பிரதேச அறிவும், வாகனம் பராமரித்தல், பழுது பார்த்தல் மற்றும் ஆங்கிலம் அல்லது சிங்களத்தில் குறைந்தளவேனும் உரையாடும் திறன் என்பன மேலதிக விரும்பத்தக்க தகைமையாகக் கருதப்படும்.

* விண்ணப்பதாரிகள் உறவினர்கள் அல்லாத இருவரின் சிபார்சுக் கடிதம் மற்றும் சுயவிவரங்களுடன் நேரில் தொடர்புகொள்ளவும்.

உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C-27590)

## தேவை
## பண வசூலிப்பாளர் (Collection Officer)

எமது நிறுவனத்திற்காகப் பணிபுரிய அனுபவம், தகுதிவாய்ந்த பண வசூலிப்பாளர் உடனே தேவை.

1. பிணைப்பணம் செலுத்தக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
2. கொழும்பிலும் எமது நிறுவனத்தில் பணியாற்றத் தயாராக இருத்தல் விரும்பத்தக்கது.
3. சாரதி அனுமதிப் பத்திரத்துடன், சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருத்தல் வேண்டும்.

சகல ஆவணங்களுடன் நேரில் வரவும்.

முகாமையாளர்/மனிதவளம், நிர்வாகம்
உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C/27591)

## மகிழ்ச்சியுடன் வாழ்த்துகிறோம்



கடந்த 35 வருடங்களாக வங்கியில் அளப்பரிய சேவையாற்றி ஓய்வுபெறும்

### திரு. பத்திநாதர் மனுவேல் இராஜசுந்தரம் அவர்கள்

18.10.1968 இல் வங்கியில் சேர்ந்த இவர், கொழும்பு வெளிநாட்டுக் கிளை, யாழ்.மேற்றரக் கிளை, மகியங்கனை கிளை, யாழ். இரண்டாம் கிளை ஆகியவற்றில் கடமையாற்றி சிரேஷ்ட உதவி முகாமையாளராக எமது சுன்னாகம் கிளையில் இருந்து 30.04.2003இல் ஓய்வு பெறுகின்றார்.

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், 30.04.1947 இல் பிறந்தார். தனது கல்வியைத் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியில் கற்று மிக இளவயதில் 18.10.1968 இல் வங்கியில் லிகிதராகப் பதவி பெற்றார்.

மிகுந்த சுறுசுறுப்பும், ஆர்வமும், நற்பண்புகளையும் கொண்ட இவரது அளப்பரிய சேவையின்னைக் கௌரவித்து முகாமையாளரும், ஊழியர்களும் வாழ்த்துவதோடு, தொடர்ந்து உடல் ஆரோக்கியத்துடனும் சுறுசுறுப்புடனும் நீடூழி வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை வங்கி, சுன்னாகம். (C-27575) முகாமையாளரும் ஊழியர்களும்.


நியூசயன்ஸ் அக்கடமி
நெல்லியடி
O/L Day CLASS
சகல பாடங்களும் ஆரம்பமாகிவிட்டன.
(17226)



கெனன் ஷொப்
போட்டோ கொப்பி மெஷின்கள்



உதிரிப்பாகங்கள் மற்றும் பழுதுபார்த்தல்
• Drum • Upper Roller
• Blades Lamp (220V/ 110V)
• Bushings • Developer
• Conveyor Belts
டோனர் ரூ 600/= தொடக்கம் உடன் பழுதுபார்ப்பு சர்வீஸ் உத்தரவாதம்.
STARLIGHT ELECTRONICS
763, 2வது டிவிஷன், மருதானை வீதி, கொழும்பு-10
Tel:693655, 681711, Fax :681712
யாழ் பிரதேசத்திற்கு தொழில்நுட்ப நிபுணர் நேரடி விஜயம் செய்வார்


## 20ஆவது ஞாபகார்த்தம்

தோற்றம் 14 - 01 - 1900



மறைவு 29 - 04 - 1983

### சாமுவேல் சீவறட்ணம் முத்தையா


ஊருக்குச் சேவையாற்றப் புறப்பட்டு
அவ்வூருக்காய் விலை மதிக்க
இயலா உங்கள் உயிரையே தியாகம்
செய்த உத்தம தந்தையே!
உங்கள் உன்னதமான
கொள்கையை, பிள்ளைகள் ஆகிய
நாங்கள் இறுதிவரை
கடைப்பிடிப்போம்.

*நமது நல்ல தேவன் தாமே உங்கள் ஆத்மாவிற்கு நித்திய இளைப்பாற்றலைத் தந்தருள்வாராக.*

"பவள வாசா" நுணாவில் மேற்கு, சாவகச்சேரி. (17266) பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 14 - 02 - 1920



மறைவு 30 - 03 - 2003

### அமரர் முருகுப்பிள்ளை முத்தையா

("மோட்டஞ்சீமா"- பிரபல வர்த்தகர்)

எம்மை வாழ வைத்து வழிநடத்திச் சென்ற எமது 'ஐயா'வின் இறுதிக் கிரியைகளில் உதவியவர்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (29.04.2003) செவ்வாய்க்கிழமை அதிகாலை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நினைவின் நிழலில் வாழும்: மனைவி, மக்கள், மருமக்கள், நடேசபிள்ளை குடும்பம்.

*முத்துமாரி அம்மன் தெற்கு வீதி, அல்வாய்.* (17310)

## மரண அறிவித்தல்

### D.R.யோசப்

(ஓய்வுபெற்ற ஊழியர்,மின்சாரசபை )

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் இல.67, வேம்படி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட D.R.யோசப் 27.04.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற இன்னாசி யோசப் - மேரிமாகிறற் தம்பதியினரின் அன்பு மகனும் லில்லிமேரியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை விக்ரர் (யாழ்.ஜெயம்) மற்றும் எலிசபெத் ஆகியோரின் மருமகனும் பாலேந்திரா, றொமோல்ட், டினேஸ்ரூபன்(புனித சம்பத்திரிசியார் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இல. 67, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். (17331) தகவல்:- திருமதி லி.யோசப் (மனைவி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மண்ணில் துவரைச்செய்கை தளராத விடாமுயற்சியால் வெற்றி!

குடாநாட்டில் உள்ள மூளாய் பகுதியில் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட துவரம்பருப்பு செய்கை வெற்றியளித்துள்ளது.

குடாநாட்டில் துவரம் பருப்புச் செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட துவரம்பருப்பு விதைகளைப் பயன்படுத்தி தனது சொந்த முயற்சியினால் அதைத திறம்பட செய்கை பண்ணியதில் வெற்றியடைந்துள்ளதாக கே.பாலசிங்கம் என்பவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் செய்கை குறித்து அவர் கூறியதாவது:-

குடாநாட்டில் துவரம்பருப்புச் செய



செழித்து வளர்ந்த துவரை

கையை ஊக்குவிக்க வேண்டும் என்ற விருப்பம் எனக்கு ஏற்பட்டது.

கடந்த 1971ஆம் ஆண்டு முதல் நான் மேற்கொண்ட முயற்சிகள் தற்போது வெற்றிகரமாகக் கைகூடியுள்ளன.

1971 -1972 காலப்பகுதியில் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆட்சியில் தானியங்களுக்கு மிகவும் தட்டுப்பாடு ஏற்பட்டது.

அரிசி, பருப்பு, மா என்பன கிடைப்பது அப்போது குதிரைக் கொம்பாக இருந்தது; பஞ்சநிலை உருவானது.

அப்போதைய ஆட்சியாளர்கள் இறக்குமதிக்கு விதித்த கட்டுப்பாடுகளே இந்த நிலைக்குக் காரணம்.

இந்நிலையில் இறக்குமதி செய்யப்பட்ட தானியங்களை ஏன் நமது மண்ணில் விளைவிக்க முடியாது? என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. குறிப்பாக துவரம்பருப்பை எமது தாயகத்தில் விளைவிக்கும் முயற்சியில் ஈடுபட்டேன்.

அந்த நேரத்தில் பெரும்பாலான மக்கள் மரவள்ளி, மொச்சைக்கொட்டை போன்றவற்றையே மூன்று நேரமும் உண்ண வேண்டிய அவலநிலை ஏற்பட்டது.

அன்று ஆரம்பித்த எனது துவரம் பருப்புச் செய்கை தற்போது பெரும் வெற்றியளித்திருக்கின்றது.

முதலில் எனது சொந்த ஊரான



கே.பாலசிங்கம்

கொழும்புத்துறையில் நான் துவரம் பருப்புச் செய்கையை பரீட்சார்த்தமாக மேற்கொண்டேன்.

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்திற்குச் சொந்தமாக இருக்கும் காணியில் துவரம்பருப்பை விதைத்து நல்ல முறையில் பேணிப் பாதுகாத்தேன். அதுவும் ஓரளவு விளைந்தது. ஆனால், திடீரென்று துவரம்பயிரைத் தாக்கிய நோயினால் அந்தச்செய்கை பாதிக்கப்பட்டது. ஆனால், நான் தளராது முயற்சித்தேன்.

**செவ்வி கண்டவர்:**
**பா.நந்தகுமார்**

தற்போது முளாயில் - வரட்சியான நிலப்பிரதேசத்தில் - பரீட்சார்த்தமாக மேற்கொண்ட துவரம்பருப்புச் செய்கை வெற்றியளித்துள்ளது.

நான் கிராம சேவையாளராகக் கடமையாற்றுகிறேன். எனது அலுவலகப் பணிகளுக்கிடையில் எனது தாயக மண்ணில் இப்படிப்பட்ட பயிரினச் செய்கைகளை ஊக்குவிப் பதில் அதிக அக்கறை காட்டி வருகிறேன் - என்றார் கே.பாலசிங்கம்.

# வீட்டுத் தோட்டத்துக்கான சில பயனுள்ள குறிப்புகள்

யுத்தத்தால் இடம்பெயர்ந்து அல்லற்பட்ட மக்கள் குறிப்பாகத் தென்மராட்சி மக்கள் தற்போது மீளக குடியமர்ந்து வரும் நேரம் இது.

சொற்ப நிலமாக இருந்தாலும் கூட அதில் பயிரிட்டு பயன்பெறும் தென்மராட்சிப் பிரதேச மக்களுக்கு மட்டுமன்றி அனைவருக்குமே உபயோகமாகக்கூடிய வகையில் வீட்டுத தோட்டத்துக்கான சில குறிப்புகளை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.

★ விதைகளை நல்ல சூரிய ஒளி படும் பண்படுத்திய மண் உள்ள பகுதிகளில் நடவும்.

★ மணல் பாங்கான பகுதியில் உக்கிய கூட்டெரு மற்றும் சேதனப் பசளையை இட்டு நன்கு பயன்படுத்தவும்.


★ விதைகளைப் போதிய இடைவெளிகளில் நடவும்.

★ நீரூற்றிய பின்னர் மண்ணீரின் இழப்பைக் குறைக்க சருகுகள், வைக்கோல், பொச்சுமட்டை போன்றவற்றை பயன்படுத்தி நிலத்தைமூடவும்.

★ தாவரத்தின் நீர்த்தேவையை அவதானித்து தேவைக்கேற்ப காலை மாலை நீரூற்றவும்.

★ பாகல், புடோல் போன்ற கொடிப் பயிர்களுக்கு பந்தலிட்டுப் படரவிடவும்.

★ பூச்சி நோய்த் தாக்கம் காணப் பட்டால் சேதன நாசினிகளை வேப்பெண்ணை மற்றும் சவுக்காரக் கரசலில் கலந்துதெளிக்கவும். பயிர்களை



குரங்கு, பன்றிகளிடமிருந்து பாதுகாப்பது உங்களது பொறுப்பு. இதற்கு கழிவு எண்ணெய் தெளிக்கலாம் பொறிகளைப் பயன்படுத்தலாம்.

*தொகுப்பு: சி.அருணாசலம்*

★ அவசியமானால் மட்டுமே இரசாயன நாசினிகளை, செயற்கை உரங்களை விவசாயப் போதனாசிரியர் அல்லது விவசாய திணைக்கள உத்தியோகத்தரின் சிபார்சுடன் இடவும்.

★ முடிந்தளவு சுயவிதை உற்பத்தியைப் பெருக்கவும்.




# குறைகள் கூறும் சம்மேளனத் தலைவர்கள் சந்தை வியாபாரத்தில் ஈடுபடத் தயாரா?

## குத்தகையாளர் ஒருவரின் கேள்வி இது

சந்தை வியாபாரிகள் ஒருசிலரின் ஆடம்பர வாழ்க்கையை அவதானித்து விட்டு, தோட்டக்காரர்களிடம் மரக்கறிகளை குறைந்த விலையில் வாங்கி அதிக விலைக்கு விற்று, சந்தை வியாபாரிகள் கொள்ளை இலாபம் சம்பாதிப்பதாக விவசாய சம்மேளனத் தலைவர்கள் கருத்து வெளியிடுவது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல."

மருதனார்மடம் சந்தை வியாபாரத்தில் ஈடுபட்டுவரும் பல வியாபாரிகள் தமது மனக் கசப்பினை - இவ்வாறு தெரிவித்தனர்.

அண்மைக்காலங்களில் விவசாய சம்மேளனத் தலைவர்கள் சிலர் விவசாயக் கூட்டங்களில் வியாபாரிகள் குறைந்த விலையில் பொருள்களை வாங்கி அதிக விலைக்கு விற்று சுலபமாகப் பணம் தேடிக் கொள்கிறார்கள் எனவும் தோட்டத்தில் கஷ்டப்பட்டு வேலை செய்யும் உற்பத்தியாளர்கள் நட்டமடைகிறார்கள் எனவும் தெரிவித்துவரும் கருத்துத் தொடர்பாக மருதனார்மடம் சந்தை வியாபாரிகள் பலர் தமது மனக்குறைபாடுகளை இவ்வாறு வெளியிட்டனர். தாம் எதிர்நோக்கும் கஷ்டங்கள், பிரச்சினைகள் பற்றி சந்தை வியாபாரிகள் சார்பில் பொ.ஆசைத்தம்பி, கே.இராசன், ரி.ஜீவதாசன், சி.பாக்கியநாதன் ஆகியோர் தெரிவித்ததாவது:-

சந்தை வியாபாரத்தை மட்டும் தொழிலாகக் கொண்டு பெரும் பணக்காரர்களாக மாறிய வியாபாரிகள் எவரும் இல்லை. ஒருசில சந்தை வியாபாரிகள் ஆடம்பர வாழ்க்கை வாழ்வதற்கு சந்தை வியாபாரம் மட்டும் காரணம் அல்ல. அவர்களுக்கு வெளிநாட்டு வருமானம் வசதிகள் கிடைப்பதால் பொருளாதார நிலையில் உயர் நிலையில் வாழ்கின்றனர்.

வியாபாரிகளில் பலர் சந்தை வியாபாரத்தைமட்டும் தொழிலாகக் கொண்டு அதில் கிடைக்கும் வருமானத்தால் தமது குடும்பத்தை கொண்டு நடத்துகின்றனர். சில வியாபாரிகள் வாழ்க்கை வசதி இருந்தும் கூட ஒரு தொழில் செய்ய வேண்டுமே என்ற நிலையில், பொழுது போக்காக வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இப்படிப்பட்ட சிலர் வசதியாக வாழ்வதைக்கொண்டு வியாபாரிகள் சும்மா இருந்து கொள்ளை இலாபம் தேடி பணக்காரர்களாக வாழ்கின்றார்கள் எனக் கூறுவது தவறு.

### தரகர்களின் தலையீடு

சந்தையில் பொருள்களின் விலையேற்றத்துக்கு தரகர்களின் தலையீடும் காரணமாக அமைகிறது. தரகர்கள் தமக்கிடையிலான போட்டிகள், வறட்டுக் கௌரவங்களால் விலைகளை அதிகரிக்கச் செய்து விடுகின்றனர்.

தோட்டக்காரர்கள் கொண்டு வரும பொருள்களின் சந்தை விலையைத் தரகர்களே தீர்மானிக்கின்றனர். உதாரணமாக சந்தை ஒன்றில் மூன்று பிரதான தரகர்கள் தொழிலில் ஈடுபடுகின்றனர். இவர்கள் ஒவ்வொருவரிடமும் வெவ்வேறு தராசுகள் உள்ளன. இவர்கள் ஒவ்வொருவரும் ஒரே வகைப் பொருள்களுக்கு வெவ்வேறு நிலையில் விலை கூறுகிறார்கள். சந்தை நிர்வாகத்தினரால் அச்சந்தையில் வைக்கப் பட்டிருக்கும் பொதுத் தராசு பயன்படுத்தப்படுவதில்லை. தரகர்கள் இல்லாமல் பொதுத் தராசு பாவிக்கப்பட்டால் விலைகளைக் கட்டுப்படுத்த முடியும்.

*சந்திப்பு: வி.பி.சர்மா*

தரகர்கள் சூழ்நிலைகளைப் பார்த்து பொருள்களின் விலைகளை உயர்த்தி விடுகின்றனர். காலை முதல் மதியம் வரை சந்தையில் பொருள்கள் விற்கப்படுவதைப்பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. சந்தைக்கு முதலில் வரும் பொருள்களுக்கு ஒரு விலையும் பின்னர் வரும் பொருள்களுக்கு குறைந்த விலையும் கூறி பொருள்களை சந்தைப்படுத்திவிட்டு தமது தரகுக் கூலியை பெற்றுக்கொண்டு சென்று விடுகிறார்கள். சந்தையில் முதலில் கூடிய விலைக்கு வாங்கிய பொருள்களை பின்னர் குறைந்த விலைக்கு விற்க முடியுமா? இதனால் விலைத் தளம்பல்களுக்கு காரணமானவர்கள் தரகர்களே.

கூடிய விலையில் நாம் பொருள்களை வாங்கிய பின் திடீர்திடீர் என ஏற்படும் ஹர்த்தால்கள், கதவடைப்புகள் போன்ற நிகழ்வுகளாலும் இராணுவ தேவைக்கென நம்பி வாங்கும் பெருந்தொகையான பொருள்களை இராணுவம் திருப்பிவிடும் சந்தர்ப்பங்களிலும் நாம் அடையும் பெரிய நஷ்டத்துக்கு யார் பொறுப்பேற்பார்கள்?

### தரகர்களை நீக்க முனைவோம்

வியாபாரிகளுக்கும் - தோட்டக்காரர்களுக்கும் இடையே நின்று தொழிற்பட்டு பொருள்களின் விலையை அதிகரிக்கச் செய்யும் இவ் இடைத் தரகர்களை நீக்க நாம் கோருகின்றோம். அடுத்தமுறை சந்தைக்கான கேள்விப்பத்திரம் கோரப்படும் போது தரகர்களை நீக்கவேண்டும் என உரியவர்களிடம் கோரிக்கை விட எண்ணியுள்ளோம். எமது கோரிக்கை ஏற்கப் படாவிடின் சந்தை வியாபாரிகள் அனைவரும் சந்தையை பகிஷ்கரிப்போம்.

### தோட்டக்காரரின் பிரச்சினை

தோட்டக்காரர்கள் சிலராலும் நாம் கஷ்டப்பட வேண்டி உள்ளது. சில தோட்டக்காரர்கள் நிறைகளை அதிகரிப்பதற்கான சில நடவடிக்கைகளை கைக்கொள்கின்றனர்.

நல்ல பொருள்களுடன் பழுதடைந்த பொருள்களைக் கலக்கின்றனர். சாக்கின் மேல் பாகத்திலும் அடிப் பாகத்திலும் நல்ல பொருள்களையும் இடைநடுவில் பழுதடைந்த பொருள்களையும் போட்டுக்கொண்டு வருகின்றனர். சாக்குகளை நனைத்தும் பாரமான பெட்டிகளில் பொருள்களைப் போட்டும் கொண்டு வருவதால் நிறை அதிகம் இருக்கும். கழிவுகள், சொத்தைகள் கலந்து காணப்படும். அவை பற்றிக் கேட்டால் இருளில் பறித்தது அதனால், கலந்துவிட்டது என்கின்றனர். முற்றிய வெண்டிக்காய்க்கு அவர்கள் கூறும் சமாதானம் அவை பறிக்கும்போது பிஞ்சாக இருந்தன. பின் காற்றுக்கு முற்றி விட்டன என்பதாகும்.

இவ்வகையான நடவடிக்கைகளால் தான் நாம் பொருள்களுக்கான கழிவையும் கூடுதலாகக் கழிக்க வேண்டி ஏற்படுகிறது.

தோட்டக்காரர்கள் பழுதடைந்த பொருள்களைக் கலக்காமல் தரமான பொருள்களை நேர்மையுடன் கொண்டு வந்தால் நாம் 10இற்கு ஒன்று என்ற

(8ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கும் - புலிகளுக்கும் இடையிலான பேச்சில்

# இணக்கம் காணப்பட்டவற்றை உடன் நடைமுறைப்படுத்துங்கள்

## பிரதமரின் செயலரிடம் சீ.வி.கே.கோரிக்கை

கடந்த ஆறுகட்டப் பேச்சுக்களிலும் இணக்கம் காணப்பட்ட விடயங்களுக்கு ஏற்ற தீர்வை நடைமுறைக்கு கொண்டு வந்து அடுத்த கட்டப் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்கவேண்டும். சமாதானத்தை விரும்பும் மக்களின் நிலைப்பாடு இதுவே.

- இவ்வாறு தெரிவித்துள்ளார். யாழ் மாநகர முன்னாள் ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம்.

யாழ்.செயலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோனுக்கு யாழ்.நிலைமைகள் குறித்து எடுத்து விளக்குவதற்காக கூட்டப்பட்ட இந்தக் கூட்டத்தில், திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலர்கள் மற்றும் செயலக அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் முன்னாள் ஆணை [illegible] வது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்பாட்டின் பிரகாரம், யுத்தநிறுத்தம் தொடர்ந்து நடைமுறையில் உள்ளது. பேச்சுகள் மட்டுமே இடைநிறுத்தப் பட்டுள்ளன.

கடந்த காலங்களில் பேச்சுக்கள் முறிவடைந்தது போன்று இன்றைய பேச்சுக்கள் முறிவடைய இடமளிக்கக் கூடாது. பேச்சுக்களில் ஒப்புக்கொண்ட விடயங்களை நடைமுறைப்படுத்த உடன் நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம். அதன் மூலம் பேச்சுக்களை மீள ஆரம்பிக்கமுடியும்.

1987ஆம் ஆண்டு தலைவர் பிரபாகரனும், மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கமும் இந்திய முன்னாள் தூதுவர் டிக்சிற்றுடன் கலந்துரையாடி இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைக்க இணங்கினர். இங்குள்ள சிலரின் தலையீட்டால், அந்தச் சபை அமைக்கும் முயற்சி தோல்வியில் முடிந்தது.

1991ஆம் ஆண்டு இடைக்கால சபை அமைப்பது குறித்து நான் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் பேச்சு நடத்தியசமயம், தாங்களும் உடன் இருந்தீர்கள். அச்சமயம் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் நாட்டின் தேசாபிமானி என்று நான் குறிப்பிட்டேன். ஏன் அப்படிக் குறிப்பிடுகின்றீர்கள் எனப் பிரேமதாஸா என்னிடம் கேட்டார். வேறுநாடு ஒன்று இலங்கை மீது படையெடுப்பை நடத்தியமைக்கு எதிராக குரல் எழுப்பிய ஒருவர் பிரபாகரன் தான் என்று நான் அவருக்குப் பதில் கூறினேன். பிரேமதாஸாவுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களும் பின்னர் தோல்வியில் முடிவடைந்தன. அதேபோன்றே 1994 இல் ஜனாதிபதி சந்திரிகாவுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களும் முறைப்படி நடத்தப்படாததால் தோல்வியில் முடிந்தன.

தற்போதைய பேச்சுக்களும் முறிவடை[illegible] தொடரவேண்டும் என்பதே [illegible]த்தை விரும்பும் எமது மக்க[illegible]ருப்பமாகும்.

பே[illegible]ரில் ஆயுதக் குறைப்புப்பற்[illegible]க்கத் தேவையில்லை. ஆயு[illegible]மது பலம் அந்தப்பலம் காரண[illegible] அரசு புலிகளுடன் பேசுகிறது. எக்காரணம் கொண்டும் ஆயுதக்குறைப்பு குறித்து பேசக்கூடாது - என்றார். (எ-3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

SOLDER தராசு விற்பனைக்கு உண்டு. (5Kg) தொடர்பு: 9/1, வெள்ளாந்தெரு யாழ்ப்பாணம்.(17318)

TaTa 1210 1/2 Body Lorry 42தொடரிலக்கமுடையது விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 16, கண்டி வீதி, சாவகச்சேரி. (17261)

## வீடு விற்பனைக்கு

உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன்னால் செல்லும் வீதியில் 3 பரப்புக் காணியுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. 222 5967. (17335)

## திருமண சேவை

1971ஆம் ஆண்டு அவிட்டம் 2ஆம் பாதம் 7இல் செவ்வாய் C.I.M.A கணக்காளராக London இல் தொழில் புரியும் ஆணிற்கு விஞ்ஞான, வர்த்தக, பட்டதாரிப் பெண் தேவை. உடன் தொடர்புகொள்ளவும். 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.(17333)

1975ஆம் ஆண்டு, திருவோண நட்சத்திரம், செவ்வாய் அற்ற, Computer எஞ்சஜினியராக Londonஇல தொழில்புரியும் ஆணிற்கு படித்த அழகான பெண் தேவை. தொடர்பு: 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (17334)

## மணமகள் தேவை

கனடாவில் பணிபுரியும் 40வயதுடைய, ரேவதி நட்சத்திரம் மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை. சாதகக்குறிப்புடனும் புகைபடத்துடனும் நேரில் சமுகந்தரவும். குமார், யாழ்.பஸ்ரியன் சந்தி. T.P. 0777 - 314449. (17327)

## வாடகைக்குண்டு

சாவகச்சேரி தேவாலய வீதியை சேர்ந்த சட்டத்தரணியும் தற்போது இளைப்பாறிய மேலதிக நீதிவானும், மேலதிக நீதிபதியும் ஆகிய சிவகுரு சுரேந்திரனின் வீடு உடனடியாக வாடகைக்கு உண்டு. தொடர்பு: திரு.சி. சற்குணநாதன் (B.M.C) 16, கண்டி வீதி, சாவகச்சேரி. (17260)

# வலி.மேற்குப் பகுதிகளில் புகையிலைச் செய்கை இம்முறை பெருவீழ்ச்சி

அராலி,ஏப்.29

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் கடந்த வருடங்களைவிட இம்முறை புகையிலைச் செய்கை பெரிதும் வெற்றியளிக்கவில்லை எனக்கூறப்படுகின்றது.

புகையிலையின் விலை வீழ்ச்சியே இதற்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - புகையிலைச் செய்கை வெற்றியளிக்காததை அடுத்து விவசாயிகள மிளகாய்,கத்தரி,வெண்டி போன்ற பயிர்களை பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருவதை அவதானிக்க முடிகிறது. (எ-14)

# பட்டம் வழங்கி கௌரவிப்பு

சுளிபுரம்,ஏப்.29

தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா சனசமூக நிலையத்தின், நிலையத்தின் போசகர்களான மு.கிருஷ்ண பிள்ளை என்பவருக்கு 'திருமுறைச் செம்மல்' என்னும் பட்டத்தையும் - மு.நமசிவாயம் என்பவருக்கு 'சமூகச் செம்மல்'என்னும் பட்டத்தையும் - வழங்கிக் கௌரவித்துள்ளனர். சைவப்புலவர் சு.செல்லத்துரை இந்தப்பட்டங்களை வழங்கிக் கௌரவித்தார். (எ-28)

# ஊரத்தி கிராமத்துக்கு மின் இணைப்பு இல்லை: பொது மக்கள் விசனம்

அராலி,ஏப்.29

அராலி மத்தி, ஊரத்தி பிரதேசத்தில் மின் கம்பங்கள் நட்டப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் இதுவரை மின் இணைப்பு வழங்கப்படவில்லை என்று அப்பகுதி மக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி பகுதிக்கு மின் இணைப்பை வழங்குமாறு அப்பகுதி மக்கள் மின்சார சபையிடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்திருந்த போதிலும், இதுவரை உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் - கூறப்பட்டது. (எ-14)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு தனியார் ஒருவர் நிதி உதவி

தென்மராட்சி,ஏப்.29

சாவகச்சேரி ஆஸ்பத்திரி நோயாளர்களுக்கு குடிதண்ணீர் விநியோகம செய்வதற்கு நீரிறைக்கும் இயந்திரம் கொள்வனவு செய்வதற்கென சாவகச்சேரியைச் சேர்ந்த ஒருவர் 40 ஆயிரம் ரூபாவினை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

மேற்படி ஆஸ்பத்திரிக்கு வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய சாலை அபிவிருத்திச் சபையினரால் வழங்கப்பட்ட நீரிறைக்கும் இயந்திரம் பழுதடைந்துவிட்டது.

இதனையடுத்து ஆஸ்பத்திரிக்கு வரும் நோயாளர்களுக்கென ஆஸ்பததிரி ஊழியர்கள் தூரத்தில் இருந்து தண்ணீர் கொண்டு வருவதை அவதானித்த பெண்மணி ஒருவர், நீரிறைக்கும் இயந்திரம் கொள்வனவு செய்யவென பணத்தினை அண்மையில் ஆஸ்பத்திரி பொறுபபதிகாரி டாக்டர் ச.அம்பிகைபாகனிடம் கையளித்திருந்தார். (எ-117)

# மாணவரின் ஒழுங்கீனங்களை சீர்ப்படுத்த நடவடிக்கை

## கல்வி அமைச்சு மேற்கொள்கிறது

கொழும்பு,ஏப்.29

பாடசாலைகளில் அதிகரித்துவரும் ஒழுக்கக் கேடுகளைச் சீர்ப்படுத்த கட்டுப்பாடுகள் புகுத்தப்பட உள்ளன. இதற்கான நடவடிக்கையை கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆசிரியர்கள் தமது பரபரப்பான வேலைப்பளுவினால் மாணவர்களை முழுஅளவில் கண்காணிக்க முடியாதுள்ளது. இதனால், பாடசாலை மாணவர்களிடையே ஒழுக்கமின்மை அதிகரித்து வருகிறது. இதனால், ஆசிரியர்களின் வேலைப் பளுவைக் குறைத்து மாணவர்கள் மீதான கண்காணிப்பை மேம்படுத்த புதிய நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட உள்ளன. அத்துடன் மாணவர்களின மனோநிலையை அறிந்து அதற்கேற்ப அவர்களை நல்வழிப்படுத்த ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கப்பட உள்ளது.

அளவுக்கு அதிகமான மாணவர்கள் ஒரு பாடசாலையில் கற்பதும் -

ஆசிரியர், மாணவர், பெற்றோர் இடையேயான தொடர்பு திருப்திகரமாக இல்லாததும் - இந்த ஒழுக்கக் கேடுகளுக்கு காரணம் எனத் தெரிய வந்துள்ளது. இவற்றை சீர்செய்யும் முகமாக மாதத்தில் ஒரு முறை யாவது ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் சந்தித்து உரையாடுவதைக் கட்டாயமாக்கப்பட உள்ளது. இவை அனைத்துக்கும் வழி செய்யத்தக்க நடவடிக்கைகள் கல்வி அமைச்சால் மேற்கொள்ளப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ)


**தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**கொடிகாமம்**

## லாண்ட்மாஸ்டர் சாரதி பதவி (தற்காலிகம்)

**வெற்றிடம் 17 165/88**

எமது சங்கத்தின் லாண்ட்மாஸ்டர் சாரதி பதவிக்கான (தற்காலிகம்) விண்ணப்பம் கோரப்படுகின்றது. சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு மட்டும் பதவி வழங்கப்படும். விண்ணப்பிப்போர் 09.05.2003 ஆம் திகதிக்கு முன்பாக தமது விண்ணப்பங்களை *பொது முகாமையாளர், தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம் - கொடிகாமம்* என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். தகைமைகள் மற்றும் விவரங்கள், விண்ணப்பப்படிவம் ஆகியவற்றை ரூபா 25 செலுத்தி சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பொது முகாமையாளர்,
தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்,
கொடிகாமம்.

(சி-27604)



# சிங்களம் மல்வான

வழிகாட்டல் ஆசிரியர்

பேச - எழுத - வாசிக்க
(மூன்றே மாதங்களில் தேர்ச்சி பெறலாம்)

வைத்தியத்துறை, வங்கித்துறை, பல்கலைக்கழக மாணவ மாணவிகளோடு நீங்களும் இணைந்து கொள்ளலாம். தமிழ் மொழி மூல போதனைகள் பேச்சு - சிங்களம் - விவரமாகக் கற்பிக்கப்படும்.

❖ இன்று முதல் புதிய வகுப்புக்கு சேரலாம்.

விவரங்களுக்கு:- ஆசிரியர் - திரு.மல்வான,
சிறாம்பியடி லேன், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(17338) (மணியம் கட்டடத்திற்கு அருகில்)



# கணக்காளர் தேவை

பில் போடவும், கணக்கு எழுதக்கூடிய முன்னனுபவமும், நம்பனம்புமுள்ள கணக்காளர் (ஆண்) தேவை. ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றவராக இருப்பதோடு, இரத்த உறவினர் அல்லாத இரு வியாபார பிரமுகர்களின் சிபாரிசுடன் உங்கள் விண்ணப்பங்கள் அனைத்தும் சுய கையெழுத்தில் இருத்தல் வேண்டும். திறமைக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படும். வார நாள்களில் மாலை 3.00 - 4.00 வரை நேரில் தொடர்புகொள்ளவும்.

**சிவா நறுமணப் பூங்கா**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 2567 (17348)


# 45 ஆவது நாள் நினைவஞ்சலி

## சின்னத்துரை றஜீவன்



தோற்றம்: 1984-03-29
மறைவு: 2003-03-16

குப்பிளான் தெற்கு, குப்பிளான்.

அண்ணன்
S.பார்த்திபன்

(17346)

# குறைகள் கூறும்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீதத்தில்பொருள்களைக் கொண்டு வரும் பைகள், பெட்டிகளுக்கு மட்டும் கழிவு போடத் தயாராக உள்ளோம். சகல தோட்டக்காரர்களும் இவ்வாறு நேர்மையுடன் தரமான பொருள்களைக் கொண்டுவர முன் வருவார்களா?

தோட்டக்காரர்களால் எமக்குப் பிரச்சினை இல்லை. ஆனால், எமது கஷ்டங்களைப் புரிந்துகொள்ளாத விவசாய சம்மேளன தலைவர்கள் சிலர் எம்மீது அபாண்டமாக பழி சுமத்துவதை எம்மால் பொறுக்க முடியாமல உள்ளது. இவ்வாறு சந்தை வியாபாரிகள் தெரிவித்தனர்.சந்தைக் குத்தகையாளரான செ.இலகுநாதன் கருத்துத தெரிவிக்கையில் கூறியதாவது:-

வியாபாரிகள் தமது கஷ்டங்களை கூறி உள்ளனர். விவசாய சம்மேளன தலைவர்களில் சிலர் அடிக்கடி வியாபாரிகளை பற்றித் தெரிவிக்கும் கருததுக்கள் ஏற்கக் கூடியவையல்ல. சந்தை வியாபாரத்தில் நேரடியாக அனுபவப்பட்டவர்களுக்கே அதன் கஷ்டங்கள் தெரியவரும் சம்மேளனத் தலைவர்கள் விரும்பினால் தனியாக வியாபாரம் செய்ய சந்தையில் இடம ஒதுக்கித்தர நாம் தயாராக உள்ளோம். அவர்கள் சந்தையில் வியாபாரம் செய்ய முன்வருவார்களா? என்ற வினாவை எழுப்பி தமது கருத்தை முடித்துக் கொண்டார்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
04 - 10 - 1957



மறைவு
10 - 05 - 2002

## திருமதி கந்தசாமி கனகமலர்

திதி: 29.04.2003

**10.05.2002 அன்று காலமான எமது அன்புத் தாயாரின் முதலாவது ஆண்டு நினைவாக இன்று (29.04.2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

நாகம்மாள் கோவில் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

க.கதிர் அனுசன்
(மகன்)

(17340)

# எம் இதய அஞ்சலிகள்



யாழ்.மறைமாவட்ட முன்னாள் ஆயர்

**மேதகு வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை**

அவர்களின் பிரிவால் துயருறும் எம் பங்கு மக்களினதும் பங்குத் தந்தையினதும் இதய அஞ்சலிகளை அவருக்கு காணிக்கையாக்குவதுடன், அவரது ஆன்மா இறைவனுடன் இணைந்து மகிழவும் பிரார்த்திக்கின்றோம்.

புனித நீக்கிலார் ஆலயம்,
மிருசுவில்.

(17342)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சீவரத்தினம் சின்னம்மா

பத்தமேனியைப் பிறப்பிடமாகவும், நவக்கிரியை வசிப்பிடமாகவும் கொண்ட சீவரத்தினம் சின்னம்மா 26.04.2003 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2003) செவ்வாய்க்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நிலாவரை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராஜவீதி, விளாத்தியடி,
நவக்கிரி, புத்தூர். (17347)

தகவல்:
இ.சந்திரபாலா (மகன்)

## அன்னலிங்கம் விசுவலிங்கம்

*(V.T.A. விஸ்வா - நாட்டுப்பற்றாளர்)*

திருநெல்வேலி கிழக்கு, முடமாவடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது வன்னியில் வசித்தவருமாகிய அன்னலிங்கம் விசுவலிங்கம் (V.T.A.விஸ்வா) (புகழ்பெற்ற நாடகக் கலைஞரும், புலிகளின் குரல் சேவையில் நாடகக் கலைஞரும்) 27.04.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் திருநெல்வேலி பிரபல ஜோதிடர் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை அன்னலிங்கம் - பாக்கியம் தம்பதிகளின் புதல்வரும் காலஞ்சென்ற சூரியகுமாரி மற்றும் சுமதி ஆகியோரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ரோபனா சுகிர்தா, யவன வினோதா (சுவிஸ்), விஸ்வசூரியன் (போராளி - நாவண்ணன), விஸ்வச்சந்திரன், சூரியலக்ஷ்மி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வாலாம்பிகை (பிரான்ஸ்), கனகசபாபதி (பொல்காவலை வர்த்தகர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருமதி ருத்திரசீலி இராசதுரை (பிரான்ஸ்), நவநீதசீலன் (பிரான்ஸ்), திருமதி நவநீதசெல்வி விக்னேஸ்வரன் (பிரான்ஸ்), பக்தகுணசீலன் (பூங்கனிச்சோலை - உரிமையாளர்), புவிராஜசீலன (பிரான்ஸ்), நந்தனசீலன் (பிரான்ஸ்), திருமதி ஜெயசீ சோதிநாதன் (பிரான்ஸ்), விஜயகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அனுபன் (சுவிஸ்), தேனுஜா (சுவிஸ்), அருண்புயன் (யாழ். இந்துக் கல்லூரி, தரம் - 10), ருத்திலா (யாழ். இந்துமகளிர் கல்லூரி, தரம் - 8), சந்துஜன், நிலாஜன் ஆகியோரின் பேரனாரும் சஜி, கஸ்கா, சந்தனகுமார் (இத்தாலி) ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திருநெல்வேலி கிழக்கு முடமாவடியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (29-04-2003) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூங்கனிச்சோலை, முடமாவடி,
திருநெல்வேலி கிழக்கு. (சி-27602)

தகவல்:
பக்தகுணசீலன் (மருமகன்)
(உரிமையாளர், பூங்கனிச்சோலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45 ஆம் நாள் நினைவலைகள்



மண்ணுலகில்
1980 - 01 - 09

விண்ணுலகில்
2003 - 03 - 16

## பாலசுப்பிரமணியம் பிரதீபன் (தீபன்)

காற்றோடு வந்த செய்தி கனவெனவே போகாதோ - நாம்
காணாத தேசத்தில் காலனவன் - உனைக்
கடுகதியில் பறித்தானோ......?
பிரதீபா! உனைக் காணத் துடிக்கும் - உன்
தம்பியை பாராயோ......!
கொஞ்சிக் குலவிய நண்பர்கள் கூடித்தவிக்கின்றனர்.
உன்னோடு உறவாடிய உறவுகள் - உனை
எண்ணி தவிக்கின்றன.

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

அல்லாரை வடக்கு,
கொடிகாமம்.

- பிரகாந் (தம்பி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(17317)

# எமது பிணக்குகளைப் புறந்தள்ளிவிட்டு பொது எதிரிக்கு எதிராக இணைவோம்!

## கலந்துரையாடலில் மாவை வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஏப்.29

எமக்கிடையே உள்ள பிணக்குகளை புறந்தள்ளிவிட்டு, பொது எதிரிக்கு எதிராக நாம் ஒன்றிணைந்து போராடவேண்டும்.

- இவ்வாறு வலியுறுத்தினார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா.

தமிழர் விடுதலைக் கூட்டணியின தலைமைச்செயலக தந்தை செல்வா அகத்தில் தெல்லிப்பழை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.சிவமகாராசா தலைமையில் நேற்றுமுன்தினம் இன்றைய அரசியல் நிலை சம்பந்தமான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய மாவை சேனாதிராஜா எம்பி. தெரிவித்ததாவது:-

பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தி கட்சிக் கூட்டத்திற்கு ஆதரவாளர்களையும், ஏனையவர்களையும் அழைத்துவிட்டு கூட்டத்தில் பேசுவது பத்திரிகைகளில் செய்தியாக வரக்கூடாது என்று கூறுவது வேடிக்கையான செயலாகும். நாம்தான் எந்த விடயங்களை எங்கு பேசவேண்டும் என்பதில் கவனம் எடுக்கவேண்டும். இதனைவிடுத்து பகிரங்கமாக எல்லாவிடயங்களையும் பேசவேண்டும் என்ற நிலைமை காணப்படக்கூடாது.

கட்சியினுடைய வரலாற்றில் பத்திரிகையில் செய்திகள், விளம்பரங்களைப் போட்டு மக்களை அழைத்துவிட்டு கட்சியின் உள்விவகாரங்கள் பற்றிப் பேசியது இல்லை. எந்த விடயங்களை எந்தமட்டில் பேசவேண்டும் என்பது பற்றியெல்லாம் வரையன்ற உள்ளது.

கட்சித் தொண்டர்கள் மட்டத்தில எதனைப் பேசவேண்டும்? பொதுச்சபை மட்டத்தில், செயற்குழு மட்டத்தில், அரசியல் குழு மட்டத்தில் எவற்றைப் பேசவேண்டும் என்றெல்லாம் முன்பு கட்டுப்பாடு இருந்தது.

தந்தை செல்வா, நாகநாதன் ஆகியோரின் காலத்திலும் பல்வேறு பிரச்சினைகள் காணப்பட்டன. ஆனால், அவை பகிரங்கமாகப் பேசப்படவில்லை. பிறரின் விவாதங்கள், விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்படவில்லை.

எங்களுக்கு இடையே இருப்பவை பிரச்சினைகள் அல்ல. அதனையிட்டு யாரும் பெரிதுபடுத்திக்கொள்ள வேண்டியதில்லை. நாம் எமக்கிடையே பிரச்சினைப்படுவதிலும் பார்க்க பொது எதிரியுடன்தான் மோதவேண்டும். இதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து பொது எதிரியை இம்மண்ணில் இருந்தும் விரட்டியடிக்கவேண்டும்.

கட்சியின் செயற்பாடுகள், நடவடிக்கைகள் பற்றிப் பேசுவதற்கு நான விரும்பவில்லை. முன்னர் தேர்தல்களின் போது தேர்தல் நியமனக் குழு தொகுதி, தொகுதியாகச் சென்று உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும், அவர்களே தேர்தல்களுக்கு கட்சியின் சார்பில் பொறுப்பாக இருப்பார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி என்பது தமிழரசுக் கட்சியும் அகில் இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் ஒரு பகுதியினரும் இணைந்து உருவாக்கியதாகும். ஆனால், இப்போது தமிழரசுக்கட்சியும் இயங்கவேண்டும் என்று சிலர் கூறுகின்றனர்.

தந்தை செலவாவின் நாமத்தைக கூறிக்கொண்டே அவரின் கொள்கைகள், இலட்சியங்களுக்குப் புறம்பாக சிலர் செயற்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். 89 ஆம் ஆண்டில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் நாம் யாருடன் கூட்டுச்சேர்ந்து போட்டியிட்டோம் என்று எண்ணிப்பார்க்கவேண்டும். அவை தந்திரோபாய செயற்பாடு ஆகும்.

இன்று அமைச்சர் மகேஸ்வரனும் டக்ளஸ் தேவானந்தாவின் பாணியையே பின்பற்றுகின்றார். பணத்தைக் கொடுத்து பத்திரிகைகளில் விளம்பரங்களைப் போடும் படியும் அவர் கேட்டு வருகிறார்.

ஒற்றுமை என்பது கொள்கை, இலட்சியத்தின் அடிப்படையிலேயே ஏற்படவேண்டும் என்று தந்தை செல்வா கூறினார். புலிகளும அரசும் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில மக்கள் தமது சொந்த் இடங்களில் மீளக் குடியமரவேண்டிய செயற்பாடுகளை நாம் மேற்கொள்ளவேண்டும்.

இடம்பெயர்ந்த மக்களை அரசு மீண்டும் சொந்த இடங்களில் குடியமர அனுமதிக்காத நிலையில், மாபெரும் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாட்டை நாம் செய்துள்ளோம். ஆனால், உயர்தரப் பரீட்சை நடைபெறும் சமயத்தில் இவற்றை நடைமுறைப்படுத்தினால் பரீட்சை பாதிப்படையும். எமது மாணவர்களே பாதிப்படைவர் என்பதற்காக ஒத்தி வைத்துள்ளோம்- என்றார் மாவை சேனாதிராஜா எம்.பி.

தமிழர் விடுதலைக் கூட்டணியின செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் போது பின்வருமாறு குறிப்பிட்டார்.

'முஸ்லிம் மக்களுடைய ஆதரவு கண்டு வடக்கு - கிழக்கை இணைக்க முடியாது. முஸ்லிம் மக்கள் சேர்க்கப்பட்டால் மொழி ரீதியாகவும் வடக்கு - கிழக்கை இணைக்கக்கூடியதாக இருக்கும்.'

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் பல விடயங்களில் கவனமும அக்கறையும் எடுத்து செயற்படவேண்டிய சூழ்நிலையே காணப்படுகிறது. மூதூரில் இடம்பெற்ற சம்பவங்கள்கூட பேச்சைக் குழப்பவேண்டும் என்ற அடிப்படையில் சில அரசியல் கட்சிகளே மேற்கொண்டவையாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும எங்களுக்கும் இடையே இன்று நல்ல தொரு உறவு ஏற்பட்டுள்ளது. ஆனால், இந்த உறவு எமக்கிடையே என்றோ ஏற்பட்டிருக்கவேண்டும். ஆனால், துரதிஷ்டவசமாக அப்பொழுது ஏற்படவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் அத்துடன் ஏனைய தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணையும்போது எம் இனத்தின் பலம் இன்னும் கூடிக்கொண்டே செல்லும். நாம் தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை முழுமையாக நியாயப்படுத்தி நிற்பது அவர்களின் அதிகாரத்தையும் அந்தஸ்தையும் சர்வதேச மட்டத்தில் உயர்த்தியே நிற்கின்றது.

அமெரிக்கத்தூதுவர் அஸ்லி வில்ஸுடன் பேசும்போதும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டமே இன்று அரசை பேச்சுக்கு வர வழிசெய்தது என்று கூறினேன். அவரும் இதனைத் தனிப்பட்டமுறையில் ஏற்றுக்கொண்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள்தான தமிழ் மக்களுடைய பிரச்சினையைத் தீர்க்கக்கூடியவர்கள் என்பதை நான் பல இராஜதந்திரிகள் மட்டத்திலும் எடுத்துக் கூறியுள்ளேன்.

நாம் எந்தவோர் அரசுக்கும் அடிபணிந்து போனவர்கள் அல்லர். ஜே.ஆர். ஜயவர்த்தனா 77 ஆம் ஆண்டு தேர்தல் முடிவடைந்ததும் எம்மை அழைத்து எமக்கு நான்கு முக்கிய அமைச்சுப் பதவிகளைத் தருவதாகக் கூறியிருந்தார். நாம் அதனை ஏற்கவில்லை. பதவிகளுக்கு அடிபணியும கட்சியாக கூட்டணி இருக்கவில்லை. எதிர்காலத்திலும் இருக்கப்போவதில்லை.

நாம் எம் மக்களின் நல்வாழ்வுக்காக, சுதந்திரத்துக்காக பாடுபட்டுக் கொண்டே இருக்கின்றோம்." - என்று அவர் குறிப்பிட்டார். (ஓ-4-86)

### காரைநகரில் இன்று வானியல் பாசறை

காரைநகர்,ஏப்.29

காரைநகர் கலாநிதி ஆதியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு வானியல் பாசறை நடத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாணக் கல்வி வலய முன்னாள் விஞ்ஞான பாட முதன்மை ஆசிரியர் அ.சோமஸ்கந்தன் தலைமையிலான குழுவினரால் நடத்தப்படவுள்ள வானியல் பாசறைகளில் தரம் 7 முதல் 9 வரையிலான வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர்களை வானியல் பாசறையில் தவறாது கலந்து கொள்ளுமாறு கல்லூரி அதிபர் பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை அறிவித்துள்ளது. (எ-73)

### கலைஞர்கள் கௌரவிப்பு

சுழிபுரம்,ஏப்.29

சுழிபுரம் வழக்கம்பரையில் அணமையில் திருநாவுக்கரசு நாடக மன்றத்தினர் நடத்திய கலை விழாவில் ஏழு கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

வலிகாமம் பகுதியைச் சேர்ந்த கலைஞர்களான நடிகைமணி வி.என். செல்வராசா, தவில் வித்துவான் எஸ். ஜெயராமன், நாதஸ்வரவித்துவான் இ.சிவகுமார், நாதஸ்வர வித்துவான் என்சிவதாஸ், ஆர்மோனிய வித்துவான க.பசுபதி, மிருதங்க வித்துவான் க.தேவநேசன், புகைப்படக் கலைஞர் எஸ்.திருநாவுக்கரசு ஆகியோரே இவ்வாறு கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

கவியரசு வீரமணி ஐயர், நாதஸ்வர மேதை கானமூர்த்தி, சிவஸ்ரீ சு.சுந்தரராசக் குருக்கள் ஆகியோர் மேற்படி கலைஞர்களுக்கு பொன்னாடை போர்த்து, மாலை அணிவித்துக் கௌரவித்தனர். (எ-28)

### சமுர்த்தி வங்கிக்கான விண்ணப்பப் படிவங்கள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம்,ஏப்.29

சமுர்த்தி வங்கி சங்கத்தில் அங்கத்தவர்களாகச் சேருவதற்கான விணணப்ப படிவங்களை கொழும்பு சமுர்த்தி அதிகாரசபை அனுப்பி வைத்துள்ளது.

மேற்படி விண்ணப்பப் படிவங்களை யாழ்மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் [illegible] அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (எ-185)


## தேவை

சமையல் தெரிந்த ஆண்கள் சுவிஸில் வேலைக்குத் தேவை.
வயதெல்லை: 25 - 40
சுவிஸில் வேலை செய்வதற்கு 18 மாத வேலைப் பர்மிட் வழங்கப்படும்.
*தொடர்பு :*
தொலைபேசி இலக்கம்: 0777-295814
02.05.2003 முதல் 05.05.2003 வரை
*(யாழ்ப்பாணத்தில் தொடர்புகொள்ளும் காலம்)*
கையில் காசில்லையே என்ற கவலை வேண்டாம் திறமையே தேவை.
கட்டணங்கள் தொடர்பான விவரங்கள் நேரில்.
**Swiss T.P.: 0041 788527576**
(17357)


## கண்ணீர்அஞ்சலி

எமது நிறுவனத்தின் நிர்மாண முகாமையாளர்
*(CONSTRUCTION MANAGER)*
**திரு. க.வைத்திலிங்கச் செட்டியார்**
அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி கந்தப்பச் செட்டியார் சரோஜா ஆச்சியின்**
மறைவினால் துயருற்று இருக்கும் அவர்களின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யூரோவில் சமூகம்.
(17358)

குடாநாட்டு மீனவர்கள்

# வெளி மாவட்டப் படகுகளை வாங்குவதில் அவதானம் தேவை!

## மாவட்ட கடற்றொழில் அதிகாரி அறிவுறுத்து

கொக்குவில்,ஏப்.29

நாட்டின் ஏனைய பகுதிகளில் திருடிய படகுகளையும், கடன் அடிப்படையில் வாங்கப்பட்ட படகுகளையும் சிலா யாழ். எடுத்துவந்து விற்பனை செய்கின்றனர்.

எனவே, வெளிமாவட்டங்களில் இருந்து கொண்டுவரப்படும் படகுகளைக் கொள்வனவு செய்யும்போது மீனவர்கள் அவை குறித்து அவதானமாக இருக்கவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் மாவட்டக் கடற்றொழில் பணிப்பாளர்.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான மாதாந்த பிரதேச கடற்றொழிலாளர் குழுக் கூட்டம் அண்மையில் உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய போதே கடற்றொழில் பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டுக்கான தரைப்பாதை திறக்கப்பட்டதை அடுத்து வெளி மாவட்டங்களில் இருந்து பெரும் எண்ணிக்கையிலான படகுகள் யாழ். எடுத்துவரப்படுகின்றன.

இவற்றில் வெளிமாவட்டங்களில் இருந்து திருடி எடுத்துவரப்பட்ட படகுகளும், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் கடன் அடிப்படையில் வழங்கிய நிதியைக் கொண்டு கொள்வனவு செயயப்பட்ட படகுகளும் அடங்கிவிடுவதையும் புள்ளி விவரங்கள் மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது.

எனவே, புதிதாகப் படகுகளைக் கொள்வனவு செய்வோரும் ஏற்கனவே படகுகள் வைத்திருப்போரும் உடனடியாகத் தமது ஆதாரங்களைச் சமர்ப்பித்துப் படகுகளைப் பதிவு செய்துகொள்ளவேண்டும். இது தொடர்பான பணிகளை கடற்றொழில் பரிசோதகர்கள் ஊடாகப் பதிவு செய்துகொள்ள முடியும். - என்றார் அவர். (எ-76)

திருகோணமலை

# ஜமாலியாபுரத்தில் கோஷ்டி மோதல்: கைக்குண்டு வீச்சில் நால்வர் காயம்!

கொழும்பு,ஏப்.29

திருகோணமலை, ஜமாலியாபுரம் பகுதியில் கடந்த சனியன்று இரவு நடைபெற்ற கைக்குண்டு வீச்சில் நால்வர் காயமடைந்தனர்.

இரு முஸ்லிம் குழுக்களிடையிலான தகராறு முற்றிய போதே கைக்குண்டு எறியப்பட்டது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரவு 8 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கைக்குணடை வீசிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என திருகோணமலை பொலீஸார் தெரிவிக்கின்றனர். இதற்கு முன்னரும் இந்த குழுக்களிடையில் மோதல் நடந்துள்ளது.

கைக்குண்டு வீச்சில் காயமடைந்த நால்வரும் திருகோணமலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ)

# மட்டுநகரில் கிரிக்கெட் விளையாட்டு மட்டையடியில் போய் முடிந்தது!

மட்டக்களப்பு,ஏப்.29

மட்டக்களப்பில் கிரிக்கெட் விளையாட்டின் போது ஏற்பட்ட மோதலில் ஒருவர் படுகாயத்துக்குள்ளானார். அவா ஆபத்தான நிலையில் கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பு மாமாங்கத்தில் இடம்பெற்றது. வீதியில் சென்று கொண்டிருந்த ஒருவர் மீது கிரிக்கெட் பந்து பட்டதால் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் இறுதியில் கைகலப்பாக மாறியது.

கிரிக்கெட் மட்டையால் தாக்குதலுக்குள்ளான சின்னத்தம்பி தேவன என்பவர் ஆபத்தான நிலையில் கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ஐ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவப்பிரகாசம் நாகரத்தினம்

தும்பளை, பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி சிவப்பிரகாசம் நாகரத்தினம் நேற்று (28.04.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் வடலிப்பாதியைச் சேர்ந்த காலஞ்சென்ற விநாசித்தம்பி சிவப்பிரகாசத்தின் அன்பு மனைவியும் சுந்தரலிங்கம் J.P. (சக்கடத்தார்), இராஜேந்திரம் (P.H.I.), இராசகுலசிங்கம் (வருமானவரித் திணைக்களம்), விஜயலக்சுமி, காலஞ்சென்ற சாரதாதேவி, சீவரத்தினம் (ஜேர்மனி), இராஜநாயகம் (சுவீடன்) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2003) செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணியளவில் தும்பளையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.சுந்தரலிங்கம் J.P.
(சக்கடத்தார் - மகன்)

*தும்பளை,*
*பருத்தித்துறை.*
(C/27606)

### திருமதி சரோஜா ஆச்சி கந்தப்பச் செட்டியார்

***(வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்)***

வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் தேவஸ்தான பரம்பரை தர்மகர்த்தாவும், உரிமையாளரும், முகாமையாளருமான காலஞ்சென்ற வைத்திலிங்கச செட்டியார் கந்தப்பச் செட்டியார் அவர்களின் அன்பு மனைவியார் சரோஜா ஆச்சி அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, பொன்னம்மாளாச்சியின் அன்பு மகளும், வைத்திலிங்கச் செட்டியார், கண்ணம்மாளாச்சியின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சுவாமிநாதபிள்ளை, ஜெகதாம்பாள், காலஞ்சென்ற புனிதவதி, சக்குபாய் அவர்களின் அன்புச் சகோதரியும், மங்களாம்பாள், காலஞ்சென்றவர்களான முத்துக்காயரோகணம் செட்டியார், ஜெகதாம்பாள், தையலாம்பாள், சுந்தரலிங்கச் செட்டியார் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஜீவா கண்ணம்மா, வைத்திலிங்கம், அசோகன், ரமேஷ் ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்திரன், அனுசுயா, மாதவி, சுபதினி ஆகியோரின் அன்பு மாமியாரும் பாலகந்தன், புவனேஸ்வரி, அபிராமி, கந்தப்பா, சிவசங்கர், ஆம்ரபாலி, யதுசங்கரி ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.04.2003) செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்திற்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மகன்மார்
க.வைத்திலிங்கம் செட்டியார்,
க.அசோகன் செட்டியார்,
க.ரமேஷ் செட்டியார்.

*54, மானிப்பாய் றோட்,*
*யாழ்ப்பாணம்.*
*021 2223264*
(C/27607)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் தலைவர்கள் மற்றவருக்கு முன் மாதிரியாக விளங்கவேண்டும்!

சாவகச்சேரி,ஏப்.29

பாடசாலைகளில் மாணவர் தலைவர்களாக இருப்பவர்கள் ஏனைய மாணவர்களுக்கு வழிகாட்டிகளாகவும், முன்மாதிரியானவர்களாகவும் விளங்க வேண்டும்.

- இவ்வாறு வலியுறுத்தினார் முன்னாள் அதிபர் க.கதிரேசு. மந்துவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் மாணவர்தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் விழாவில கலந்துகொண்டு உரை நிகழ்த்திய அப்பாடசாலையின் முன்னாள் அதிபர் க.கதிரேசு மேலும் தெரிவித்ததாவது:-

பாடசாலைகளில் மாணவர் தலைவராக விளங்கும் சந்தர்ப்பம் எல்லோருக்கும் கிடைக்காது.

எனவே இவ்வாறு மாணவர் தலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் சமூகத்தில் முன்மாதிரியானவர்களாக விளங்க வேண்டும். ஏனைய மாணவர்களும் அவர்களைப் பின் பற்றி நறபிரஜைகளாக உருவாக வேண்டும்.

தற்போதைய மாணவர் தலைவர்கள் நாட்டின் தலைவர்களாக எதிர்காலத்தில் விளங்க வாய்ப்பு உண்டு. இம்மாணவர்கள் எதிர்காலத்தில் ஏதோ ஒரு விதத்தில் எமது சமுதாயத்தில் தலைவர்களாக விளங்குவார்கள். குறைந்தது வீட்டில் சிறந்த குடும்பத்தலைவராக விளங்குவார்கள். எனவே, மாணவர்கள் பாடசாலையில் கல்வி பயிலும் காலம் மிகவும் பொன்னானது. அதனை மாணவர்கள் சிறந்த முறையில் பேண வேண்டும் என்றார் அவர்.

இந்நிகழ்வில் ஆசிரிய ஆலோசகர் எஸ்.நாகராசா, உள்ளூராட்சி உதவி உத்தியோகத்தர் திருமதி வ.மகாலிங்கம் உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஒ-31)

# மாணவர்கள் கல்வியுடன் நின்றுவிடாது எழுத்துலகிலும் பிரகாசிக்கவேண்டும்

## யாழ்.மாவட்ட நீதிவான் விக்னராஜா தெரிவிப்பு

மாணவர்கள் கல்வியோடு நின்றுவிடாது கட்டுரை எழுதுதல், சிறுகதை எழுதுதல், கவிதை புனைதல் ஆகிய துறைகளிலும் தங்கள் ஓய்வு நேரத்தை செலவிடவேண்டும்.

தங்கள் எழுத்தாற்றலை அதிகரிக்கவும் எதிர்காலத்தில் சிறந்த சிறுகதை எழுத்தாளராகவும், படைப்பாளியாகவும், கவிஞராகவும் விளங்குவதற்கும் இவை பேருதவியாக இருக்கும்.

இங்கு வெளியிடப்பட்ட 'சமூகச் சுடர்' கையெழுத்து சஞ்சிகை மாணவர்களினதும் இளைஞர், யுவதிகளினதும் எழுத்தாற்றலை ஊக்குவிக்கும், உந்து சக்தியாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

- இவ்வாறு தெரிவித்தார். யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா.

தொல்புரம் கிழக்கு விக்னேஸ்வரா சனசமூக நிலையம் அண்மையில் நடத்திய 'சமூகச் சுடர்' கையெழுத்துச் சஞ்சிகை வெளியீட்டு விழாவிலும் பெரியோர்களை கௌரவித்து பட்டம் வழங்கும் விழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நிலையத் தலைவர் தி.உதயசூரியன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் நீதிபதி தொடர்ந்து உரையாற்றுகையில் :-


நல்ல நூல்களை வாசிக்கும் பழககம இன்று மாணவர்களிடையே குறைந்துவருகின்றது. தங்கள் ஓய்வு நேரத்தில பாடசாலை நூலகங்களிலோ அல்லது சனசமூக நிலையங்கள் நடத்தும் நூலகங்களிலேயோ உள்ள நூலகளைப் பெற்றுப் படிக்கவேண்டியது அவசியம்.

பாடசாலை புத்தகக் கல்வி மட்டும அறிவை வளர்க்க போதுமானது அல்ல. கடந்த காலங்களில் இந்த சனசமூக நிலையம் எட்டு கையெழுத்துச் சஞ்சிகைகளை வெளியிட்டுள்ளமை ஒரு குறிப்பிடத்தகக முன்மாதிரியான செயற்பாடாகும்.

இதன்மூலம் இந்தக் கிராமத்திலுள்ள இளம் சந்ததியினரின் எழுத்தாற்றல் ஊக்குவிக்கப்படுகின்றது.

அத்துடன், சமூக சேவை, கல்விச்சேவை, ஆன்மீக சேவை ஆகிய சேவைகளில் ஈடுபட்டுவரும் சான்றோர்களையும் பெரியார்களையும் பாராட்டிக் கௌரவிக்கும் இந்த நிலையத்தின் செயற்பாடுகளும் வரவேற்கத்தக்கனவாக உள்ளன - என்றார். சமூகச் சுடர் - 09 கையெழுத்து சஞ்சிகையின் வெளியீட்டுரையை வலிமேற்கு உதவிப் பிரதேச செயலர் மு.சிவராஜா நிகழ்த்தினார். முன்னாள் அதிபர், சைவப் புலவர் சு.செல்லத்துரை மதிப்பீட்டுரையை நிகழ்த்தினார். (எ-135)

## புதிய சித்திரத் தேர்



கைதடி இணுங்கித் தோட்டம் அருள்மிகு கந்தசாமி ஆலயத்திற்கான சித்திரத் தேர் வடிவமைப்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கடந்த பங்குனி உத்தரத் தினத்தன்று (18.03.2003) புதிய சித்திரத் தேருக்கான பவளக்கால் நடும் வைபவம் சிறப்பாக இடம்பெற்றது.

செயலாளர்,
கைதடி இணுங்கித்தோட்டம்
அருள்மிகு கந்தசாமி ஆலயம்.

(ச-276050)

## இளவாலை
## புனித யூதா ததேயு பங்கின் இதய அஞ்சலி



இளவாலை பங்குத் தந்தையாகவும் பின்பு யாழ். மறைமாவட்ட ஆயராகவும் பணிபுரியும் காலத்தில் எமது ஆலயத்திற்கு அடிக்கல் நட்டு ஆலயத்தை அமைத்து சேவைகள் பலபுரிந்து தற்போது இறைபதம் எய்திய ஆயா

**பேரருட் திரு.வ.தியோகுப்பிள்ளை**

ஆண்டகை அவர்களுக்கு எமது இதய அஞ்சலி.

புனித யூதா ததேயு ஆலயம், இளவாலை. (17349) பங்குத் தந்தையும், பங்கு மக்களும்.

## நீங்காத நினைவலைகள்

21ஆம் ஆண்டு



அமரர்
இளையவன் பொன்னன்

4ஆம் ஆண்டு



திருமதி
பொன்னன் பொன்னம்மா

10.04.1922 ← மண்ணில் → 03.08.1930
23.03.1982 ← விண்ணில் → 13.05.1999

உங்கள் நினைவுகளால் எங்கள் வாழ்நாள் முழுவதும் கண்ணீரில் நனைந்து அழுகின்றோம். காலம்தான் உங்களைக் கவர்ந்தாலும் உங்கள் அன்பு நினைவுகள் பசுமையானவை. ஆண்டுகள் பல சென்றாலும் உங்களை நாம் நினைவு கூருவோமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கலாசாலை வீதி, திருநெல்வேலி. (17351) பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| சீட்டிழுப்பு வாரம் | 468 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு |
|---|---|---|
| திகதி | 25.04.2003 | செல்லுபடியாகும் தொடர் இல. 5855213-5869078 |

வெற்றி இலக்கங்கள் **12 17 32 55**

லக்கினம் விருச்சிகம்



ஜக்பொட் பரிசு ரூபா. 2,467,350/- வெல்லப்பட்டது

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **1,000,000/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 290,248 | 10 | 2,902,480 |
| 2 இலக்கங்கள் | 26,493 | 20 | 529,860 |
| 1 இல + லக்கினம் | 26,215 | 30 | 786,450 |
| 2 இல + லக்கினம் | 2,481 | 100 | 248,100 |
| 3 இலக்கங்கள் | 719 | 500 | 359,500 |
| 3 இல + லக்கினம் | 61 | 5,000 | 305,000 |
| 4 இலக்கங்கள் | 03 | 100,000 | 300,000 |
| 4 இல + லக்கினம் | 01 | 2,467,350 | 2,467,350 |
| மொத்தம் | 346,221 | - | 7,898,740 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 7,898,740/-

தொடர் இல. 4890382க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2003 ஏப்பிரல் 29ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

5878454-8-28
5884545-4-67
5874512-6-37
5876628-8-37
5878285-8-39

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M



## JOIN OUR TEAM

A CAREER IN IT...

Wanted employment for our computer sales, service, networking & maintenance company at Jaffna.

**Vacancy for**

**Sales/Marketing Executive - Male / Female**

- G.C.E (A/L) Examination.
- Good command in English.
- Valid riding / driving license.
- Part professional qualifications will be essential.
- Age 20-26 years.
- Computer literacy.
- Minimum 1year experience in the field.

**Computer Hardware Technician - Male**

- Good command in English
- Valid riding / driving license
- Part professional qualifications will be essential.
- Age 20-26 years.
- Minimum 1year experience in the field.



**Electronic Technician - Male**

- Age : 20-30 years.
- Able to repair Monitor, UPS, Power Units, Scanners and Printers
- Short term training can be given at colombo.

**Trainee Sales / Computer Hardware Executives Male / Female**

- Age 19 - 23 years.
- GCE (A/L) Examination.
- Good communication skills in English.
- Excellent service mind set.
- Training at Colombo.

If interested, please send your application within 14 days.

THE HUMAN RESOURCE MANAGER.

**MICRO PC SYSTEMS**

REGIONAL OFFICE, NO:37, 37th LANE, COLOMBO - 06


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனையிறவு வெற்றி விழாவின் காலை நிகழ்வுகளில் சில....





வெற்றி விழாவின் காலை நிகழ்வில் ஈகச்சுடர் ஏற்றுவதையும் நினைவு மரம் நடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: தேவா)






இராணுவத்தினரின் ஆட்லறி நிலையை கரும்புலிகள் தகர்த்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவிடத்தில் கரும்புலிகள் மேஜர் தனுஷன், மேஜர் சுதாஜினி ஆகியோரின் தந்தையர்கள் மலர் மாலை அணிவிப்பதையும் புலிகளின் முக்கிய தளபதிகள், போராளிகள் அகவணக்கம் செலுத்துவதையும் படங்களில் காணலாம்.






மூத்த தளபதி பொட்டு அம்மான் அஞ்சலி செலுத்துவதையும் பெண் போராளிகள், காவல்துறையினரின் அகவணக்கத்தையும் படங்களில் காணலாம்.

# ஆயுதக் கண்காட்சியில் எடுக்கப்பட்ட படங்கள்....





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கட்டுகஸ்தோட்டையில் தியேட்டர் உரிமையாளர் தாக்கப்பட்டு கொலை!

## சினிமா பார்க்க வந்த சிலருடன் தகராறு

கொழும்பு,ஏப்.29

கண்டி, கட்டுகஸ்தோட்டைப் பகுதியில் சினிமா தியேட்டர் உரிமையாளர் ஒருவர் நேற்றுமுன்தினமிரவு கொலை செய்யப்பட்டார். 56 வயதுடைய ரஞ்சித் வீரசிங்க என்பவரே இந்த உரிமையாளராவார்.

இரவுப் படக்காட்சிக்கு வந்த ஒரு சிலராலேயே அவர் தாக்கிக் கொல்லப்பட்டார் என்று கட்டுகஸ்தோட்டை பொலீஸார் தெரிவிக்கின்றனர். யுவதி ஒருவர் பகிடி செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகவே இவர் தாக்குதலுக்கு உள்ளானார் எனக் கூறப்பட்டது.

தாக்கப்பட்ட தியேட்டர் உரிமையாளர் கட்டுகஸ்தோட்டை தனியார் மருத்துவமனையொன்றில் சேர்க்கப்பட்டு மரணமானார்.

இச்சம்பவம் தொடர்பாக நால்வர் கைது செய்யப்பட்டனர். பொலீஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டிருக்கின்றனர்.

## சைக்கிள் ஓட்டப்போட்டியில் வெற்றி பெற்றோர்

ஆனையிறவுத்தளத் தகர்ப்பு வெற்றிப் பெருவிழாவையொட்டி தமிழீழ விளையாட்டுத்துறையின் ஏற்பாட்டில் சைக்கிள் ஓட்டப்போட்டியும் நேற்று இடம்பெற்றது.

வவுனியா, புளியங்குளத்தில் நேற்றுக்காலை 7 மணிக்கு ஆரம்பமான சைக்கிள் ஓட்டப்போட்டி பிற்பகலில் பளையை அடைந்தது.

தமிழீழம் எங்கும் இருந்து பெரும் எண்ணிக்கையானவர்கள் பங்குகொண்ட இந்தப் போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:-

முதலிடம்: ம.நிர்மலேஸ்வரன் (யாழ்ப்பாணம்), இரண்டாம் இடம்: ந.ஜெசுதன் (யாழ்ப்பாணம்), எஸ்.கமல்ராஜ் (யாழ்ப்பாணம்).

ஆறுதல் பரிசுகள்: க.கமலேஸ்வரன் (யாழ்ப்பாணம்), க.லோகேஸ்வரன் (யாழ்ப்பாணம்), மு.பத்திநாதன் (வவுனியா), பூசயந்தன் (யாழ்ப்பாணம்), செ.யோகேஸ்வரன் (வவுனியா).

முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கு சிறப்புப் பரிசில்களும், சான்றிதழ்களும், ஏனைய ஐவருக்கும் ஆறுதல் பரிசில்களும் சான்றிதழ்களும் நேற்றைய வெற்றி விழாவில் வைத்து வழங்கப்பட்டன. (ம-3)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.29

யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தற்போதைய, எதிர்கால செயற்பாடுகள் பற்றி ஆராய்வதற்கான கலந்துரையாடல் இன்று முற்பகல் 11 மணிக்கு சமாசத்தில் நடைபெறவுள்ளதாகத் தலைவர் ப.கனகலிங்கம் அறிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் அனைத்து கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர்கள், வர்த்தக முகாமையாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.29

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் இன்று காலை 10மணிக்கு உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

அரச திணைக்களங்களின் தலைவர்கள், கூ.சங்களின் தலைவர், பொது முகாமையாளர் மற்றும் அதிகாரிகள் இதில் கலந்துகொள்வர். (எ)

## சமாந்தர சைக்கிள் சவாரி; 10 பேர் சிக்கினர்!

தென்மராட்சி,ஏப்.29

வீதியில் சைக்கிள்களில் சமாந்தரப் பயணம் மேற்கொண்ட பத்துக்கும் மேற்பட்டோர் நேற்று சாவகச்சேரி நகர்ப்பகுதியில் பொலீஸாரிடம் சிக்கினர்.

- இவ்வாறு சமாந்தரமாக சைக்கிளில் வந்தோரில் ஒருவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

பிரத்தியேக வகுப்புகளுக்குச் சென்ற மாணவிகள் மற்றும் அரச ஊழியர்கள் பலர் இவ்வாறு பொலீஸாரிடம் சிக்கிக் கொண்ட போதிலும், எச்சரிக்கையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர். (எ-117)

## நல்லூர் பிரதேச சபையின் பகுதி அலுவலகம் அரியாலையில்

யாழ்ப்பாணம்,ஏப்.29

அரியாலை பகுதி மக்களின் வசதிக்காக நல்லூர் பிரதேச செயலகத்தின் பகுதி அலுவலகம் அரியாலையில் இயங்கவுள்ளது.

இவ்வலுவலகம் செவ்வாய், வியாழன் ஆகிய நாள்களில் காலையில் இயங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நல்லூர் பிரதேச செயலாளர் வ.வே.முருகையா மேற்கொண்டுள்ளார்.

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையக் கட்டடத்தில் இச்செயலகம இயங்குவதற்கு வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## கசிப்பு விற்பனை குற்றச்சாட்டில் பெண் கைது!

இணுவில்,ஏப்.29

கசிப்பு உற்பத்தி செய்ததாக பெண் ஒருவர் நேற்றுமுன்தினம் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

உரும்பிராய் மேற்கு அன்னங்கை பகுதியைச் சேர்ந்த இப்பெண்ணிடமிருந்து கசிப்பும் கசிப்பு உற்பத்திக்கான உபகரணங்களும் பொலீஸாரினால் கைப்பற்றப்பட்டதாகத் தெரியவருகிறது.

இதேவேளையில், அப்பகுதிகளில கசிப்பானது சொப்பிங் பைகளில் அடைக்கப்பட்டு பல விலைகளில் விற்பனை செய்யப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

## வலைப்பந்தாட்டம்

வலி.வடக்கு,ஏப்.29

வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்மாவட்டப் பிரதேச செயலகங்களின் அணிகளுக்கிடையே நடத்தப்படும் வலைப்பந்தாட்டப் போட்டியில் நாளை புதன்கிழமை காலை 8 மணிமுதல் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

உடுவில் பிரதேச செயலக அணி எதிர் நல்லூர் செயலக அணி

ஊர்காவற்துறை உதவி அரச அதிபர் பிரிவு அணி, கோப்பாய் பிரதேச செயலக அணி

கரவெட்டி பிரதேச அணி எதிர் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி

சங்கானை பிரதேச செயலக அணி எதிர் யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணி

வேலணை பிரதேச அணி எதிர் மரு தங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி

பருத்தித்துறை, சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணிகள் இரண்டாம் சுற்றில் இருந்து பங்கேற்கவுள்ளன.

## சமய சந்நிதி

யாழ்ப்பாணம்,ஏப்.29

புளியங்கூடல் இந்தன் முத்து விநாயகர் ஆலயத்தில் கடந்த 22 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெற்று வருகின்ற உற்சவத்தில் 'விநாயகர் புராணம்' என்னும் பொருளில் தமிழ் வேந்தன் ஆற்றும் சொற்பொழிவு இடம்பெற்று வருகின்றது. (ம-ரி)

# மூன்று இளைஞர்கள் சுட்டுக்கொலை! வயலில் சடலங்கள் கண்டுபிடிப்பு

களனி, பெத்தியாகொட பகுதியில இளைஞர்கள் மூவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். வயல் வெளியில் கண்டுபிடிக்கப்பட்ட இந்தச் சடலங்கள் 23, 24 வயதினரான இளைஞர்களுடையது என்று பேலியகொடைப் பொலீஸார் தெரிவித்தனர்.

இம்மூவரும் முகத்துவாரம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என பொலீஸார் நம்புகின்றனர். இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு நடைபெற்றிருக்கின்றது.

கொலையாளிகள் யார், கொலைக்கான காரணம் என்ன என்பது பற்றி இதுவரை எதுவும் தெரியவில்லை. பாதாள உலகக் கோஷ்டியினர் சம்பந்தப்பட்டதாக இச்சம்பவம் இருக்கலாம் என்று பொலீஸார் கருதுகின்றனர்.

வீடுகளிலிருந்து கூட்டி வரப்பட்ட இந்த இளைஞர்கள் வயல் வெளியில் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் எனத தெரிகிறது. பேலியகொடை பொலீஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# ரூ. 13 கோடி ஹெரோயினுடன் மதுரையில் இலங்கையர் கைது

மதுரை,ஏப்.29

மதுரையில் இலங்கையர் ஒருவரிடமிருந்து 13 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளை மதுரைப் பொலீஸார் கைப்பற்றியிருககின்றனர்.

செல்வகுமார் என்ற இந்த நபரும அவருடனிருந்த வேறு இருவரும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இதற்கிடையே, இராமநாதபுரம் பகுதியில் இலங்கைக்கு கொண்டு வரத்தயாராக வைக்கப்பட்டிருந்த 55 லட்சம் ரூபா பெறுமதியான போதைப் பொருளை இராமநாதபுரம் பொலீஸா கைப்பற்றியிருக்கின்றனர். போதைப் பொருளை வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டார். (ம)

# புனரமைக்கப்பட்ட சிறுவர் வார்ட் திறப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.29

'பியேர்ஸ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் 18 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட யாழ்.போதனா வைத்தியசாலையின் 12ஆம் வார்ட் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

காலை 10.30 மணிக்கு 'பியோஸ' நிறுவனத்தின் யுனிலீவர் தலைவர் அசான் மாலிக் இந்த வார்ட்டினைத் திறந்து வைக்கவுள்ளார்.

இந்த வார்ட் சிறப்பாக வர்ணம் பூசப்பட்டுள்ளதுடன், பல நவீன கருவிகளைக் கொண்டதாகவும் புனரமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த நிறுவனம் யாழ். போதனா வைத்தியசாலையின் அறிவிப்புப் பலகைகளை அழகுடன் அமைத்துக் கொடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (ம-12)

# கண்டியில் ரணவிரு அறக்கட்டளையின் அவசரக் கூட்டம் குழப்பத்தில் முடிவு

கொழும்பு,ஏப்.29

அகில இலங்கை ரணவிரு(போர் வீரர்கள்) அறக்கட்டளையின் அவசரக் கூட்டமொன்று குழப்பத்தில் முடிவுற்றது. கண்டி டி.எஸ்.சேனநாயக்க நூல் நிலைய மண்டபத்தில் நேற்று முன்தினம் இக்கூட்டம் நடைபெற்றது.

அறக்கட்டளையின் நிர்வாகிகளிடையே கைகலப்பு மூளும் அளவுக்கு மூண்ட தகராறைத் தணிக்க கூட்டத்தில் கலந்துகொண்ட இராணுவ, பொலீஸ் அதிகாரிகள் தலையிட வேண்டியதாயிற்று.

கூட்டம் ஆரம்பமானது முதலே அறக்கட்டளையின் தலைவர் பாத்ததும்பர சங்கநாயக்க வண. தீகல சுமண ஜோதிக்கும் செயலாளர் ஜயசேன கொடிகமுவவுக்கும் இடையே சூடான வார்த்தைகள் பிரயோகிக்கப்பட்டன.

கூட்டத்தில் ஏற்பட்ட குழப்ப நிலை காரணமாக புதிய நிர்வாகிகள் தெரிவும் நடைபெறவில்லை.

அறக்கட்டளையின் நிதி தொடர்பாக குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டதே குழப்பத்துக்கு காரணமாகும். சுமார் 200பேர் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

# யாழ். மாநகரப் பகுதியில் நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஏப்.29

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

தடுப்பூசி போடப்படும் இடங்களும் நேரமும் வருமாறு:-

நாளை புதன் கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணிவரையும் பிற்பகல் 2 மணிமுதல் 4.30 மணி வரை நல்லூர் மூத்த விநாயகா சனசமூக நிலையத்தில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படும்.

அடுத்த மாதம் 6 ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 12.30 மணிவரை பத்திரகாளி கோவிலடி வள்ளுவர் சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 2 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரையில் ஓட்டுமடம் கலைமகள் சனசமூக நிலையத்திலும் -

அடுத்த மாதம் 7 ஆம் திகதி காலை 8.30 மணிமுதல் 12.30 மணி வரை அறிவொளி சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 2 மணி முதல் 4.30 மணிவரை நாவலர் வீதி, கீரிப்பிள்ளையார் மகப்பேற்று நிலையத்திலும் தடுப்பூசி போடப்படவுள்ளது.

இதேவேளை, வளர்ப்பு நாய்களுக்கான உரிமத்தகடுகளையும் அன்றைய தினங்களில் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-12)

# புத்தளம் ஏ.எஸ்.பி. இந்திரன் சிலாபத்துக்கு இடமாற்றம்

புத்தளம்,ஏப்.29

புத்தளம் உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் வி.இந்திரன் நேற்றுமுன்தின்ம் முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். சிலாபம் பொலீஸ் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள இவர், சிலாபம் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகரின் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் விசேட குற்றத்தடுப்புப் பிரிவின் அதிகாரியாகக் கடமையாற்றுவார்.

ஏ.எஸ்.பி.இந்திரன், புத்தளம் பகுதியிலிருந்து இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என கடந்த மார்ச் 29 ஆம் திகதி புத்தளம் மக்களும் அதன் பின்னர் இவரை இடமாற்றம் செய்யக்கூடாது என பெரும்பாண்மை இன குழுவினரும் ஆர்ப்பாட்டம் செயதனர்.

# நிரந்தரமான ஒரு....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்ன என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றோம்.

உண்மையில் எமது பிரச்சினையை பேசித் தீர்க்க முடியுமா? இல்லையேல் அதற்கு வேறுவழி என்ன? என்பது பற்றி யோசித்துத் தீமானிக்கவேண்டியவர்கள் நீங்கள்தான்.

'தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முதுகெலும்பு கடற்புலிகள். அதை யாரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

## 1984இல் கடற்புலிகளுக்கு வித்திடப்பட்டது

1984ஆம் ஆண்டு 'சோழன்' என்ற கடற்கலத்தை தேசியத் தலைவர் சர்வதேச கடற்பரப்பில் ஓடவிட்டதன் மூலம் கடற்புலிகள் படையணிக்கான பாதையை அன்றே அவர் திறந்து விட்டார்.

எமது சொந்தக் காலில் வலிமை மிக்க படை ஒன்று சிறந்த போராட்டத்தினை நடத்த கடற்படை ஒன்று அவசியம் என்பதை தமிழீழத் தேசியத் தலைவர் அன்றே உணர்ந்திருந்தார்.

சமாதானப் பேச்சுக்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில்கூட இலங்கை அமைச்சரான மிலிந்த மொறகொட அமெரிக்காவிடமிருந்து கடற்படைக்கு கப்பல் கொள்வனவு செய்துள்ளதுடன், இலங்கைக் கடற்படையை பலப்படுத்தும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுவருகின்றார்.

அவர் பேச்சு நடத்துவதற்காக வெளிநாடுகளுக்குச் செல்கிறாரா? அல்லது இன்றைய சூழ்நிலையில் கடற்படையினுடைய பலத்தை அதிகரிக்கும் நடவடிக்கைக்காக அவர் செல்கிறாரா? என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

இன்று பாரிய வெற்றிகளை ஈட்டியுள்ள கடற்புலிகள், தமிழீழத்தின் ஆணிவேர்கள். இப்படையணி தொடர்ந்தும் இயங்கவேண்டும்.

பலம் பொருந்திய அணியாக, இலங்கைக் கடற்படையை மேலும் திறம்பட எதிர்கொள்ளக்கூடிய வகையில் மேலும் பல இளைஞர்களையும், யுவதிகளையும் இப்படையணியில் வந்து இணைந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

- எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-12-10)

நிறைஞ்சனாஸ் சங்கானை
இன்று முதல் விஜய், ரம்பா, ரகுவரன் நடித்த
என்றென்றும் காதல் (ரீலஸ்) (C-27606)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.00 (பு.நே.)
China Strike Force ஜக்சன்

லிபேட்டி அச்சுவேலி
மக்கள் திலகம்
M.G.R நடித்த
இரகசிய பொலீஸ் 115 (ரீலஸ்)
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(C/27581) T.P.: 070 212223

ராகம்ஸ் சுன்னாகம்
இன்று முதல்
(ரீலஸ்)
11.00, 3.00, 7.00 (பு.நே.) (17227)

ராஜா யாழ்ப்பாணம்
சரத்குமார் (இருவேடம்), சிம்ரன்,
ரோஜா, கிரன், வடிவேல்
அரசு
10.30, 2.30, 6.30,
BEST OF THE BEST

அலைகள் மன்ற வளர்ச்சி நிதிக்காக நடத்தப்பட்ட
அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள
முதலாம் பரிசு - 5098
2 ஆம் பரிசு - 4407
3 ஆம் பரிசு - 0913
ஆறுதல் பரிசில்கள்
3543, 0675, 1618, 1977, 1200,
0545, 5820, 3262, 3610, 0784
இதற்குரிய பரிசினை ஒரு மாத காலத்திற்குள் இல.1, 2ம் குறுக்குத்தெரு, குருநகர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் பெற்றுக்கொள்ளவும்.
அலைகள் மன்ற நிர்வாகத்தினர்
(C/24610) அலைகள் மன்றம், குருநகர், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### இரத்தினம் மகேந்திரன்

வட்டுமேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட இரத்தினம் மகேந்திரன் 27.04.2003 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் - கனகாம்பிகையின் பாசமிகு ஏக புதல்வனும் ஆனந்தநாயகியின் அன்புக் கணவரும் பிரசாந்தி, பிரதாபன், ஜெகதாபன், றஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரபாகரனின் பாசமிகு மாமனாரும் டிலானியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வட்டுமேற்கில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (29.04.2003) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

(C/27609)

தகவல்:
த.கந்தசாமி (CTB)
மாமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை: இழுத்தடிக்கவே அரசு விருப்பம்!

## சமாதானப் பேச்சு சூழ்நிலை மாறும்வரை நம்பியாரின் அறிக்கை சமர்ப்பிப்பு இல்லை

கொழும்பு,ஏப்.29

வடக்கில் உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மக்களை மீளக்குடியமர அனுமதிக்கும் விடயத்தில் இருந்து வரும் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு கிட்டும் அறிகுறி இல்லை. அப்பிரச்சினையை அரசு இழுத்தடிக்கவே விரும்புகிறது எனக் கூறப்படுகிறது.

உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினை தொடர்பாக ஓய்வுபெற்ற இந்திய இராணுவ அதிகாரி லெப்டினன்ட் ஜெனரல் சதீஷ் நம்பியாரின் ஆலோசனையை இலங்கை அரசு கோரியிருந்தது. இது தொடர்பாகத் தமது நிபுணத்துவ அறிக்கையை இவ்வாரத்தில் அவர் சமர்ப்பிப்பார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அது மேலும் தாமதமாகும் எனத் தற்போது தெரியவந்துள்ளது.

வடக்கிலும், கிழக்கிலும் யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களை அவரவர்களது சொந்தப் பிரதேசங்களில் - தாயக பூமியில் - மீளக்குடியமர ஒரு காலவரையறைக்குள் வசதி செய்து கொடுப்பது என இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் இணக்கம் கண்டிருந்தனர்.

அதன்பின்னர் இரு தரப்புக்கும் இடையில் இடம்பெற்ற பல சுற்றுப் பேச்சுக்களின் போதும் இது குறித்து விரிவாகப் பேசப்பட்டது. பல முடிவுகள் எடுக்கப்பட்டன.

எனினும், உயர் பாதுகாப்பு வலயங்கள் எனத் தாம் பிரகடனப்படுத்தியுள்ள பிரதேசங்களில் - பாதுகாப்புக் கருதி மக்களை மீளக் குடியமர அனுமதிக்கமுடியாது என்று இலங்கை அரசின் பாதுகாப்புப் படைகள் அடம்பிடித்ததால் இந்த விடயத்தில் சிக்கல் எழுந்தது.

எனவே, மக்கள் மீளக்குடியமர வசதி செய்யும் விதத்தில் இப்பிரதேசங்களில் இராணுவத்தினரின் நிலைகளை மாற்றியமைக்கலாமா என்பது குறித்து ஜெனரல் நம்பியாரின் ஆலோசனையைப் பெறுவது என்று அரசு முடிவு செய்தது.

நமபியாரின் சேவை கோரப்பட்டது. அவர் நேரில் வந்து களநிலைமைகளைப் பார்வையிட்டுச் சென்றார்.

அவரது நிபுணத்துவ அறிக்கை அந்தா வருகின்றது இந்தா வருகின்றது எனச் செய்திகள் அவ்வப்போது வெளியாகின. எனினும், அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்விவகாரம் மாதக் கணக்காக இழுபட்டது.

இந்நிலையில்தான் ஏப்ரல் மூன்றாம் வாரத்துக்குப் பின்னர் ஜெனரல் நம்பியார் கொழும்பு வருவார் எனவும், ஏப்ரல் 25ஆம் திகதி தமது அறிக்கையை இலங்கை அரசுக்கு சமர்ப்பிப்பார் எனவும், தகவல்கள் வெளியிடப்பட்டன. ஆனால், அதுவும் நடக்கவில்லை.

அதற்கிடையில், பேச்சுக்களிலும், புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் முடிவு செய்யப்பட்ட - மக்களின் மீள் குடியமர்வு மற்றும் புனர்வாழ்வளிப்பது உட்பட்ட - விடயங்களை இலங்கை அரசு நிறைவுசெய்யத் தவறிவிட்டது எனக் குற்றம் சுமத்தி, அவற்றை நிறைவு செய்வதற்கு அரசுக்குக் கால அவகாசமும், இடைவெளியும் வழங்கும் விதத்தில் சமாதானப் பேச்சுக்களை இடைநிறுத்தும் அறிவிப்பைப் புலிகள் விடுத்துள்ளனர்.

ஜெனரல் நம்பியாரின் அறிக்கை, உயர்பாதுகாப்பு வலயங்களில் இப்போதைக்கு மக்கள் மீள்குடியமர்வதை வரவேற்கவில்லை எனவும், சமாதான நடவடிக்கைகளின் போது சில விடயங்கள் பூர்த்தி செய்யப்படுவதுடன் இப்பிரதேசங்களில் மக்கள் மீள்குடியமர அனுமதிப்பதைத் தொடர்புபடுத்தி நிபந்தனை விதிப்பதாக அது அமைந்துள்ளது எனவும் விடயமறிந்த வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

ஜெனரல் சதீஷ் நம்பியார் இராணுவ நிபுணர் என்ற ரீதியில் - தனிப்பட்ட முறையில் - இலங்கை அரசால் இப்பணிக்கு அமர்த்தப்பட்டவர் எனவும், இது விடயத்தில் அவர் இந்தியாவின் உத்தியோகபூர்வப் பிரதிநிதி அல்லர் எனவும் இலங்கை அரசுத் தரப்பு வட்டாரங்களில் கூறப்படுகின்றது.

என்றாலும், அவர் இந்திய இராணுவத்தின் ஓய்வுபெற்ற மூத்த அதிகாரி, இப்போதும் கூட இந்திய இராணுவக் கொள்கைகளை வகுக்கும் மூளைவளை ஆளணியில் (Think Tank) முக்கியதஸ்தர்.

ஆனால், அவரது நிபுணத்துவ அறிக்கை சுயாதீனமாக இருந்தாலும், இந்தியா நலனையும், மத்திய அரசின் பொதுவான இராணுவக் கொள்கைப் போக்கையும் சிரத்தையையும் கவனத்தில் கொண்டதாகவே இருக்கும் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இந்தப் பின்னணியில், உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினைக்கு நம்பியாரின் சிபாரிசுகளையோ - அவரது அறிக்கையையோ, - தீர்வாக இப்போது முன்வைக்க முயன்றால் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள விரிசலை மேலும் பூதாகரமாக்கும் என இலங்கை அரசு நம்புவதாகத் தெரிகின்றது.

இந்தச் சூழ்நிலையில்தான் தமது இலங்கை விஜயத்தை காலவரையறை - முடிவு செய்யாமல் ஜெனரல் நம்பியார் ஒத்திவைத்திருக்கிறார் எனவும் -

இலங்கை அரசு அவரது அறிக்கையை இப்போதைக்கு எதிர்பார்க்காத காரணத்தால் அதை வழங்குவதையும் அவர் தள்ளிப் போட்டிருக்கிறார் எனவும் -

விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

(ம)

## யாழ்.கோட்டை....

(முதலாம் பக்கத் தொடர்சி)

நகர மத்தியில் இவ்வாறான முகாம் ஒன்று அமைக்கப்படுவதற்கு பொது அமைப்புகளும் அரசியல் கட்சிகளும் விடுதலைப் புலிகளும் கடும் கண்டனம் தெரிவித்ததுடன், அந்தப் பணிகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்று கோரிக்கையும் விடுத்திருந்தன.

இந்த அழுத்தம் காரணமாக பிரதமரின் பணிப்பின் பேரில் மாநகர சபை வளாகத்தில் புதிய முகாம் அமைக்கும் பணி நிறுத்தப்பட்டது.

இப்போது அதற்குப் பதிலாக - அந்த இடத்துக்கு அருகிலேயே உள்ள - யாழ்.கோட்டை மற்றும் அதன் மேற்குப் பகுதி ஆகியவற்றை உள்ளடக்கி புதிய முகாம் அமைக்கப்படவுள்ளது.

இது குறித்து பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிக்கை ஒன்றை விடுத்திருந்தது. அதிலேயே புதிய முகாம் அமைப்பது தொடர்பான விவரங்கள் வெளியிடப்பட்டிருந்தன.

"ஞானம்ஸ், சுபாஸ் ஹோட்டல்கள் மற்றும் அதனை அண்டிய 80 வீடுகள் என்பன தற்போது இராணுவ மற்றும் பொலீஸாரின் பாவனையில் இருக்கிறது" - என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த முகாமை நகரின் மத்தியில் உள்ள அரசுக்குச் சொந்தமான இடம் ஒன்றுக்கு மாற்றுவதற்கு முற்பட்டதாகவும் -

ஆனால், அதனை எதிர்த்த அரசசார்பற்ற நிறுவனங்கள், அரசியல் கட்சிகள் மற்றும் விடுதலைப் புலிகள் ஆகியோர் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததாகவும் -

நிலைமைகள் சீரடையும் போது அந்த இடங்களை எல்லாம் யாழ். மாநகர சபை மீண்டும் பாவனைக்கு உட்படுத்தவேண்டிவரும் என்று அந்த அமைப்புக்கள் சுட்டிக்காட்டியதாகவும் - அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இந்த எதிர்ப்புக்களால் அரசு இப்பிரச்சினை குறித்து பாதுகாப்பு அமைச்சு, படை அதிகாரிகள், யாழ். பிராந்தியப் படைத் தளபதி ஆகியோருடன் கலந்தாலோசித்தது. இறுதியாக கடந்த வெள்ளிக்கிழமை இந்தப் பிரச்சினை தொடர்பாக இறுதித் தீர்மானம் ஒன்று காணப்பட்டது

"அதன்படி அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் (ஞானம்ஸ், சுபாஸ் முகாம்) படையினர் மற்றும் பொலீஸார் ஆகியோரை யாழ்.கோட்டைக்கும் அதற்கு மேற்குப்புறமாக உள்ள அரச காணிகளுக்கும் மாற்றுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

"இதற்கான நில அளவைகள் ஏற்கனவே முடிந்துவிட்டன. புதிய முகாம் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான பொருள்கள் இந்திய கடன் திட்டத்தின் கீழ் பெறப்படும் ஏற்கனவே அவற்றில் ஒரு தொகுதிப் பொருள்கள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளன."

- என்று பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய முகாம் அமைய இருக்கும் இடத்தில் ஒரு பகுதியான கோட்டையின் மேற்குப்புறத்தில் முன்னர் பண்ணை வைத்தியசாலை அமைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

### வெற்றி விழாவுக்கு வந்த மக்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்

கிளிநொச்சி,ஏப்.29

ஆனையிறவு வெற்றி மற்றும் தீச்சுவாலை முறியடிப்பு ஆகியவற்றின் வெற்றி நாள் நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக 25 பஸ்களில் பளை நோக்கி வந்த வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட மக்களை இலங்கை இராணுவத்தினர் திருப்பி அனுப்பியதாக 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது.

(ம-10)

## பிரபாவுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்சி)

பின்னர் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் கூட்டுறவாளர்களான பெ.கனகசபாபதி, சி.சிவமகாராசா ஆகியோர் கொடியசைக்க கேடயத்துடனான அஞ்சலோட்டம் பிற்பகல் 12.50 மணிக்கு புறப்பட்டது.

ஆனையிறவு, 'தீச்சுவாலை' சமர் முறியடிப்பு என்று எழுதப்பட்ட பட்டியை அணிந்த இளைஞர் ஒருவர் புலிக்கொடியுடன் முன்னே செல்ல பின்னே ஓர் இளைஞனும் இரு யுவதிகளும் சென்றனர். அதன் பின்னே கேடயத்தை எடுத்துச்செல்லும் வாகனம் சென்றது. அதன் பின்னால் இளைஞர்களும் யாழ்.ப.நோ.கூ.சங்க ஊழியர்களும் சென்றனர். எல்லோரும் மஞ்சள் மற்றும் சிவப்பு நிறத்திலான பட்டிகளை அணிந்திருந்தனர்.

அஞ்சலோட்டம் ஆரம்பமான செயலகப் பகுதியில் அரச அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் உட்பட நூற்றுக்கணக்கான பொது மக்கள் திரண்டிருந்தனர். செயலகப் பகுதி எங்கும் மஞ்சள் மற்றும் சிவப்பு நிறத்திலான கொடிகள் கட்டப்பட்டிருந்ததுடன் எழுச்சி கீதங்களும் இசைக்கப்பட்டன.

அஞ்சலோட்டத்தைத் தொடர்ந்து குடாநாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் லொறிகள், மினிபஸ்கள் மற்றும் பஸ்களில் வெற்றிவிழா நடைபெறும் பளைப் பகுதி நோக்கிச் சென்றனர்.

வழி நெடுகிலும் வெற்றிக் கேடயத்துக்கு மக்கள் ஆரவார வரவேறபு வழங்கினர். மழை பெய்தபோதும் அதனையும் பொருட்படுத்தாது மக்கள் பளை நோக்கிப் படையெடுத்தனர்.

வல்வெட்டித்துறை விளையாட்டுக் கழகம், வல்வெட்டித்துறை ஆதிகோயிலடி மக்கள், வல்வெட்டித்துறை ஆதிலஷ்மி கடற்றொழிலாளர் சங்கம், வடமராட்சி கிழக்கு விளையாட்டுக் கழகம், கிளிநொச்சி மக்கள், மன்னார் மக்கள், வவுனியா மக்கள், முல்லைத்தீவு மக்கள், கிளிநொச்சி தனியார் கல்வி நிறுவனங்களின் சமாசம் சார்பாகவும் தலைவருக்கு நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டன. கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை, கேணல் ஜெயம், கேணல் விதுஷா, மட்டு - அம்பாறை சிறப்புத் தளபதி ஜெயானந் ... ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-10-180-5-173-182)

## பாலசிங்கம்....

(முதலாம் பக்கத் தொடர்சி)

'உதயனுக்கு' தெரிவித்ததாவது:-

இந்தத் தகவல் வெளியானதும் தமிழ்ச்செல்வனுடன் தொடர்புகொண்டு உரையாடினேன். தான் அவ்வாறு ஏதும் தெரிவிக்கவில்லை எனத் தமிழ்ச்செல்வன் என்னிடம் தெளிவுபடுத்தினார். ஆங்கில வார இதழுக்கு அவர் அளித்த பேட்டியின் மொழிபெயர்ப்பின்போது ஏதும் தவறு நேர்ந்திருக்கலாம். வாஷிங்ரன் மாநாட்டுக்கு எம்மை அழைக்கச் செய்வார் என்ற உறுதிமொழி எதையும் அமைச்சர் மொறகொட எமக்கு எப்போதும் தரவில்லை. நாம் பங்குபற்றும் நிலைமை ஏற்படாவிட்டால் தானும் அந்த மாநாட்டில் பங்குபற்றமாட்டேன் என்றும் கூட அவர் எப்போதும் எம்மிடம் கூறியிருக்கவில்லை.

இந்த உண்மை நிலையை அமைச்சர் மொறகொடவுடன் தொடர்புகொண்டு நேரில் தெரிவித்தேன். நிலைமையை தெளிவுபடுத்தினேன்.

பேச்சுக்களில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகளில் மிகவும் அறிவுபூர்மானவர் அவர். மிகவும் நல்ல மனிதர். அவரது மனதை நோகடிக்கும் எண்ணம் ஏதும் எமக்கு இல்லை" - இவ்வாறு மதியுரைஞர் பாலசிங்கம் 'உதயனுக்குத்' தெரிவித்தார்.

## வெற்றி விழா....

(முதலாம் பக்கத் தொடர்சி)

அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகளான கேணல் தீபன், தினேஷ் மாஸ்டர், காவல்துறைப் பொறுப்பாளர் ரஞ்சித்குமார், அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் தங்கன், புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன், விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பாப்பா ஆகியோரும் கலந்துகொண்டனர். பெருந்திரளான பொதுமக்கள் நிகழ்ச்சிகளைக் காணத் திரண்டிருந்தனர். கனரக மற்றும் சிறுரக ஆயுதங்களின் கண்காட்சியும் இடம்பெற்றது.

மாலை நிகழ்வுகள் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தலைமையில் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகின. நிகழ்வின் தொடக்கத்தில் புலிகளின் படையணிகளின் அணி வகுப்பு இடம்பெற்றது.

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படைப் பிரிவு, மாலதி படைப்பிரிவு, சோதியா படைப்பிரிவு, கடற்புலிகளின் மகளிர் படைப்பிரிவு, காவல்துறைப் படைப் பிரிவு ஆகியவற்றின் அணிவகுப்பு இடம்பெற்றது.

அணிவகுப்பு மரியாதையை கேணல் தீபன் மற்றும் கேணல் விதுஷா ஆகியோர் ஏற்றுக்கொண்டனர்.

அணிவகுப்பைத் தொடர்ந்து அகவணக்கம் இடம்பெற்றது. தலைமையுரையை விடுதலைப் புலிகளின் அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ. தஙகன் நிகழ்த்தினார். கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, கேணல் விதுஷா ஆகியோரின் உரைகளும் இடம்பெற்றன. மன்னார் மாவட்ட மக்களால் தங்கத்திலான கேடயம் கையளிக்கப்பட்டது.

நிகழ்வைக் கண்டுகளிப்பதற்காக யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களபபு, திருகோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 30 ஆயிரம் மக்கள் பளைப்பிரதேசத்தில் திரண்டிருந்தனர். நிகழ்வின்போது மழைபெய்யத் தொடங்கியபோதும் அதனைப் பொருட்படுத்தாது மக்கள் நிகழ்வினைக் கண்டுகளித்தனர். எனினும், மழை பலத்த காரணத்தால் இரவு 7.30 மணிக்கு நிகழ்வுகள் இடைநிறுத்தப்பட்டன. பின்னர் 8.15 மணியளவில் அவை மீண்டும் ஆரம்பமாகின

போராளி சங்கர் எழுதிய 'யாழ். மண்ணில் மீண்டும் பதிநத எம் தடங்கள்' எனும் நூல் வெளியீடும் இடம் பெற்றது. நூலைக் கேணல் ஜெயம் வெளியிட்டு வைத்தார். தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வுகள் தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்காக உள்நாட்டு வெளிநாட்டு, செய்தியாளர்கள் பலரும் பளைப் பகுதியில் திரண்டிருந்தனர்.

(ம-10-12-182-173)

A/L GENERAL ENGLISH
PAST/MODEL PAPERS (With Answers)
தொகுப்பு:
த.தனேந்திரன்
B.Com. (Hons.), M.M.Spl., H.N.Dip. in Acc.
பூபாலசிங்கம், சிறிலங்கா, சுப்பிரமணிய, துர்க்கா, சிதம்பரப் பிள்ளை, பிரியங்கா, நாவலர், அறிவமுது.
T.P.: 0777 686713
(17355)

CHEMISTRY CENTRE
83, பலாலி வீதி, கந்தர்மடம்.
Electricity
இன்று ஆரம்பம் - 5 p.m.
Tue. 5-6 p.m. & Wed. 4-5 p.m.
By: வர்ணன்
(C/27013)

PHYSICS
ஆசிரியர்: திரு. பா.தர்மசீலன் B.Sc.
(ஆசிரியர் - யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பளை)
ஆரம்பம்: 02.05.2003 வெள்ளி 9 a.m.
2004 A/L
சடப்பொருளின் இயல்புகள்
TUE., THU. 6.30 a.m.
2005 A/L
பொறியியல்
MON., WED. 6.30 a.m.
T.A.T.கல்வி நிலையம்
அம்பலவாணர் வீதி - உடுவில்
(Group Classes கற்பிக்கப்படும்)
(17336)

தவறவிடப்பட்டது
நேற்று (28.04.2003) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் குளப்பிட்டிச் சந்திக்கும் ஓட்டுமடம் சந்திக்கும் இடையில் சிறிய கைப்பை ஒன்று தவறவிடப்பட்டது. அதில் குறிப்பாக சிவகுமார் சண்முகராணியின் விசேட அடையாளஅட்டை உள்ளது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் உடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
அ.சிவகுமார்
சிவா கொம்யுனிகேசன்
(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அருகில்).
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 222-2913, 3084
(17356)

வேலையாள்கள் தேவை
உணவு பரிமாறுபவர்கள் (சப்பிளையர்) பத்துப் பேரும், மேசை துடைத்து உதவும் உதவியாளர்கள் நான்கு பேரும் ரீ மேக்கரும் தேவை. விரும்பியவர்கள் உடன் தொடர்புகொள்ளவும். சம்பளம் உடன் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:
T.P.0777 - 146 844, 021 - 222 2373
(17352)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.04.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org